தென்றல்

ஆசிரியர்:— கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 3 | சென்னை | 20—10—56 | சனிக்கிழமை | இதழ் ௪

இலக்கியத்தில் காதல்

காதல் உயிரினங்களை ஊக்குவிக்கும் ஒரு பேராற்றல். மனிதன் முதல் சிற்றெறும்பு ஈருக அனைத்துயிர்களின் வாழ்விலும் காதல் திகழ்கின்றது. மைந்தனும் மங்கையும் கடற்கரையிலே உலவ வருவதும், மானும் பிணையும் மகிழ்ந்து பிணைவதும், புருக்கள் அலகு முத்தம் பரிமாறிக்கொள்வதும் நம்மில் பலரும் அறிந்த காதற் காட்சிகள். எனினும், இவைகளினூடே, மனிதனின் காதல் ஒரு தனிச் சிறப்புற்று விளங்குவதை நாம் காண்கின்ருேம். அதனில் பெருமையும் உயர்வும் இழைந்து நிற்பதை உணர்கின்ருேம். இச்சிறப்புக்குக் காரணம், மனிதன் 'உள்ளம்' படைத்தவனுக விருப்பதுதான். பிற உயிர்களின் காதல் இனப்பெருக்கம் ஒன்றிலேயே வந்து முடிகின்றது. மனிதனின் காதலோ, உடலளாவியதாக மட்டுமின்றி, இனப்பெருக்கத்தையே தனி நோக்கமாகக் கொண்டிராமல், உள்ளத்தின் உணர்வுகளும் பின்னியதொன்ருகின்றது.

இளைஞர், மகளிர் தம் வாழ்வில் எழும் பெரும்பாலான உணர்ச்சிகள், எண்ணங்கள், செய்கைகள் காதலை அடிப்படையாகக் கொண்டவை தாம். மனித உள்ளத்தின் நுண்ணிய உணர்வு பலவும் காதலை நிலைக்களனுகக் கொண்டு வளர்ந்து பரவி, வாழ்வில் இன்பம் தருவது மட்டுமன்றிப் பல்வித நற்பண்புகளையும், கற்பனைத் திறனையும் பெருக்குகின்றன எனலாம்.

ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் காதல் பொதுவானதுதான். ஆயினும், பெண்மை மென்மை நிறைந்தது. உணர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வதில் எளியது. எனவேதான் ஆண்களைவிடப் பெண்களைக் காதல் (ஏற்பட்டபின்) அதிகமாகப் பாதிக்கின்றது.

ஆண்களின் உள்ளமாகிய மத்தளத்தில், 'காதல்' எனுங் கோல் கொண்டு வன்மையாகத் தாக்கும் போதுதான் உணர்ச்சியின் ஒலிகள் தெறிக்கின்றன. ஆனால், பெண் உள்ளமோ, பல மெல் நரம்புகள் கொண்ட யாழ் போன்றது. காதல் எனும் தென்றல் அதன்மேல் வீசினுற் போதும். இன்னிசை கிளம்பிவிடுகின்றது.

இலக்கியங்கள் பல இவற்றைத்தான் விரித்துத் தருகின்றன நமக்கு. காதலின் விளைவாகப் பெண்ணுளத்தே பிறக்கும் எண்ணங்களையும், தவிப்புக்களையும் உள்ளத்தைத் தொடுமளவுக்குப் படம்பிடித்துத் தருகின்றன. இத்தகு உணர்ச்சி ஓவியங்கள் தீட்டுவதிலே முத்தொள்ளாயிரம் தலைசிறந்த ஒன்ருக நிற்கின்றது. பாடல்களைப் படிக்கும் போது அவற்றை நாம் பாடல்களாகவே உணர்வதில்லை. துடிக்கும் மங்கையின் குரலையே நாம் அங்கு கேட்கின்ருேம்.

அந்நூலில் ஒரு காட்சி: தலைவி ஒருத்தி. ஊர்வலம் வந்த பாண்டிய மன்னனைக் கண்டு கழிபெருங் காதல் எய்திவிட்டாள். மன்னனே, இவளைப் பொருட்படுத்தாது சென்றுவிட்டான். மங்கையின் காதல் நெஞ்சம் தவிக்கின்றது, மன்னவனையே எண்ணி எண்ணிக் கனவுகண்டு கிடக்கின்றது. இங்ஙனையிலே ஒருநாள் காலை. தலைவியின் முகத்திலே என்றுமில்லாத சோகம், துயரம், ஏக்கம்! தோழி இம்மாறுதலைக் காண்கின்ருள்... "ஏனம்மா இப்படிக் குலைந்துபோய் இருக்கின்ருய் என்று கேட்கின்ருள். தலைவியும் கூறிவிடுகின்ருள் காரணத்தை:

"தோழீ, தேன் ஊறும் புது மலர் மாலையை, மார்பகத்தில் அணிந்த பாண்டியன் கனவில் என்னருகில் வரக்கண்டேன். நேரில், நனவில் தான் கூட முடியவில்லை. கனவிலாவது கூடி மகிழலாம். காதலனும் வந்து கடைவிழி முறுவல் காட்டிக் காத்துக்கிடக்கின்ருன் என்று பெருங் களிப்புற்றேன்......ஆனால், பாவி! என் உள்ளமே அதற்கு இடையூருகிவிட்டது! என் உளத்தில் என்னதான் புகுந்ததோ!— அவன் பரியிவர்ந்து ஊர்வலம் வருங்கால் என் பக்கம் விழியும் திருப்பிலனே என்ற கோபமோ?— அவனைக் கண்டதும் நான் ஊடிவிட்டேன். அவன் என் புலவியை நீக்க எவ்வளவோ முயன்ருன்; அருகு வந்தான்; தோள் தொட்டான்; கொஞ்சு மொழி பேசினுன். நானே ஊடலை நீக்கவில்லை. ஆதலின் அவனும் என்மேல் ஊடல் கொண்டு புறமொதுங்கினுன். உடனே நானும் மிக அஞ்சி, ஊடலை நீத்து, அவனது கோபத்தையும் தணிக்க முயன்றேன். அவனே ஊடல் தணிய மறுத்தான்: அந்தோ கூடலின்பத்திற் கழியவேண்டிய

ஈழங்கொண்ட இராசாதிராசன்

— ௮-ம் பக்கம் —

கண்ணதாசன்

இரவு இங்ஙனம் வறிதே அழிந்தது! இதற்குள் கனவும் கலைந்துவிட்டது தோழி! கலைந்துவிட்டது! இதுதான் என் துயர்க்குக் காரணம் என்று கூறுகின்றாள்.

"யானூடத் தானுணர்த்த
யான்உணரா விட்டதன்பின்
தான்ஊட, யான்உணர்த்தத்
தான்உணரான்—தேன்ஊறு
கொய்தார் வழுதி
குளிர்சாந் தணிஅகலம்
எய்தா திராக்கழிந்த வாறு!"

எத்துணை ஏக்கம் தொனிக்கின்றது இப்பாடலில்! 'கனவிலாவது கூடலாம் என்றிருந்தேன்! ஊடல் நீண்டு என்னை உருக்குலைத்து விட்டதே' என்ற விம்மல் ஒலி கேட்கின்றது. ஊடல் உணவுக்கு உப்பு அமைவது போன்றது. அது அளவு மிகுந்துவிட்டதோ உணவெல்லாம் பாழ்! அந்தப் பாழ்மை இங்கு நேர்ந்துவிட்டதை ஆசிரியர் படம் பிடிக்கின்றார். ஊட, உணர்த்த, உணராது போக, மீண்டும் ஊட, உணர்த்த அதுவும் பயனின்றிப் போக, என்று, அந்தச் சொற்களை அமைப்பதிலேயே, ஊடல் நீண்டுவிட்டமை நன்கு புலனாகும்படி ஆசிரியர் அமைக்கின்றார். அந்த அடுக்குச் சொற்களினால் ஊடல் மிகை தோன்றும் ஒரு நெருங்கிய சூழ்நிலையை உண்டாக்கிவிடுகின்றார். அடித்த அடியிலே, மன்னனின் தோற்றத்தை மங்கை சொல்லின் மூலம் புனைந்துரைப்பதன் மூலம், அவள் உள்ளத்தின் துயரம் எத்துணை பெரிதாகின்றது என்பதனைக் காட்டிவிடுகின்றார். எதனில் நம்பிக்கையும் வேட்கையும் மிகப் பேரளவில் வைக்கின்றோமோ அப்பொருளை எய்தமுடியாவிட்டால் தான் பெருந்துயரடைவது மனித இயல்பு. மங்கையோ பாண்டியனது தடந்தோளிலே பெருவேட்கை கொண்டிருக்கின்றாள்: அதை எத்துணை அழகாகப் புலப்படுத்துகின்றார் ஆசிரியர்! "தேன் ஊறு கொய் தார் வழுதி குளிர்சாந்தணி அகலம்!" என்கின்றார். ஒவ்வொரு சொல்லையும் நிறுத்தி நிறுத்திப் பாடியோ படித்தோ உணரவேண்டும்! அவனது மார்பு, தேன் ததும்பும் மலரும், குளிர்ந்த சாந்தும் திண்ணெனக் கொண்டு பரந்து விரிந்தது; எனவே, அது நமக்குத் தேனென இனிப்பது, உள்ளத்தின் வெப்பமெலாம் தீர்க்கும் குளிர்ச்சுனை போன்றது. திளைத்து விளையாட, மிக அகலம் வாய்ந்தது என்று தலைவி நினைக்கின்றாள். இத்துணை சிறந்த பொருள் கிடையாமற் போயிற்றே எனில், ஏக்கத்தைக் கூறவா வேண்டும்?

கவிதை, உரைநடை போன்று ஒரே கருத்தினை மட்டும், வெறும் யாப்பில் அமைத்துக் கூறிவிடுவதல்ல. அது வானவில் போன்றது. பலவித வண்ணங்கள் அதில் நெளியும். பலவிதப் பொருள்கள் ஆங்குச் செறிந்திருக்கும். அத்தகு பாடல் தான் சிறந்த பாடல் என அறிஞர் கருதுகின்றனர்.

மேற்கூறிய பாடல்கள் இவ்விளக்கத்துக்கு மிகமிகப் பொருந்துகின்றன. பலவித உணர்ச்சிக் கோணங்களினின்றும் நாம் அவற்றைக் காணமுடிகின்றது. நமது தமிழகத்துக் கோவில்களிலே சில சிற்பங்கள் உண்டு. ஒரு திசைக்கண் நின்று பார்த்தால் மாடாகத் தோன்றும். வேறொரு திசைக்கண் நின்று பார்த்தால், அந்த மாடே, வேழமாகத் தோன்றும் விந்தையினைக் காணலாம். சிறந்த பாடல்களும் அது போன்றவை. நமது பாடல்களைப் பார்ப்போம். காதலினால், பெண்ணுளத்தே பலவாறான எண்ணங்களும் கற்பனைகளும் கிளை விடுகின்றன என்று முன் பார்த்தோம். இப்பாடல்களில் கைகக்கிளை பற்றிக் கூறப்படுவதால், கைகூடாத காதலின் ஏமாற்றமும் ஏமாற்றத்தின் எதிரொலியும் — சேர்ந்துகொள்கின்றது. காதலித்த மங்கையின் சில சில உணர்ச்சி நிலைகளினின்று நாம் பார்த்தோமாயின், இப்பாடலும் (இரு பாடல்களின் கருவும் ஒன்றுதலின், ஒரே பாடல் எனக் கொள்வோம். சிந்தனை ஒருமைக்காக) ஒவ்வொரு உணர்ச்சி நிலையையும் விளக்கக்கூடிய முறையில் அமைந்திருப்பது போற்றத்தக்கது.

முன்னர்க் கூறப்பட்ட பொருள், காதலினால்,-அது கைகூடுவது அரிதாக விருப்பதால்,-பெண்ணுள்ளத்தில் ஏற்பட்ட **ஏக்கத்தை** - கனவாயினும், அதிலும் வாழ்க்கையின் சில உண்மைகள் (**Reality**) வந்து தாக்குவதை-விளக்குகின்றது.

மதங்கன் பி. ஏ.

அடுத்தபடியாக, காதல்கொண்ட மங்கையின் **கற்பனை (Imagination)** எந்நிலையில் இருக்கின்றது என்பதையும் இப்பாடலிலே நாம் காணமுடிகின்றது. ஒரு காதலி என்னதான் கற்பனை செய்வாள் என்பது பொதுவாக நமக்குத் தெரிந்ததுதான். எனினும் அவற்றுக்கோர் அழகிய உருவம் கொடுத்து, ஒரு கதையினையே அக்கற்பனையில் உண்டாக்கிச் செல்வது தான் கவிஞனின் ஆற்றல். காதல், மங்கையைப் பிற்காலத்துக்கு இழுத்துச் செல்கின்றது. காதல் கைகூடினால்தான் கணவனுடன் நடத்தும் இல்லறம், அதன் இன்ப துன்பங்கள், வேடிக்கைகள் பூசல்கள் எவ்வாறிருக்கும் என்பதனை அவள் கற்பனைக் கண்களாற் காணுகின்றாள். கூடும் இளம்பிறை நுதலில் வியர்வை புரளவும், மார்பிலே வடம் புரளவும், கூந்தல் கலைந்து முதுகிலே புரளவும், கைவளை பூசலிடவும், வாயின் சிவப்பை விழிவாங்கவும், விழியின் வெளுப்பு வாயிலே தோன்றவும், கணவனுடன் கூடும் காட்சியைக் காண்கின்றாள்; வண்டுகள் ஊசலாட, விழி பூசலாட, உறவாடும் இன்பக் காட்சியைக் கற்பனையாற் கண்டு மகிழ்கின்றாள்.

அதோடு மட்டும் நின்றுவிடவில்லை. காதல் பல விநோதமான **(Peculiar)** கற்பனைகட்கு இடமளிக்கின்றது. தன் மணவாழ்வில் ஊடல் நிகழ்ந்தால் எப்படி இருக்கும்? என அவள் கற்பனை செய்கின்றாள். "யான் ஊடுவேன், அவர் உணர்த்தவும் நான் உணரேன், பின் அவர் ஊடுவார், உணரார், இரவும் கழியும், இவ்வாறும் சில இரவுகள் கழியலாமல்லவா' என்று அவள் கற்பனை ஒரு காட்சியை உருவாக்குகின்றது. இன்னும், "அவர் வருவார், நான் ஊடி முகம் திருப்பிக்கொள்வேன், பின்னர்ப் புல்லுவார்; நான் நாணித் தலை தாழ்வேன், இறுதியாகக் கலவியிலோ, அந்தக் களிமயக்கில் எதுவுமறியாது கண்மூடிக் கைச்சரக்காற் காணவொண்ணாப் பெரும் பதத்தில் கிடப்பேன். இவ்வாறு அவர் முகத்தையும் கண்டு பார்க்காமல் இரவு கழியும் "அன்றும் அவள் கற்பனை புரிகின்றாள்...இக்கற்பனைகள் நெஞ்சிலே துளிர்விட்டு ஒரு புறத்தே வளர்கின்றன. அவ்வாறிருக்கும் போதுதான் ஒருநாள் தோழி கேட்கின்றாள், "என்னடி, காதலனை இரவு கண்டாயா?" என்று...அவளுக்குத்தான், தலைவி, தன்கற்பனையைத் துயரத்தின் மேலேற்றிப் பாடலாகப் பதில் கூறுகின்றாள். இப்போது மறுமுறை பாடலைச் சிந்தித்துப் பார்ப்போம்! அதில் ஊடலையும், கூடலையும் பற்றி எத்துணை அமைப்பு முறையோடு, நிரல்பட, அமைக்கின்றார்! காதலி, தன் கற்பனையால், தன் பிற்கால வாழ்வில் சில திட்டங்கள் வகுப்பதுபோல் தோன்றவில்லையா!

காதல் உள்ளத்தின் கற்பனை என்ற நிலையிலேயும் பாடல்கள் பொருள் தருகின்றன என்பதறிந்தோம். இனி, கைகூடாக் காதலால் மங்கை உள்ளத்தெழுந்த **ஏமாற்றத்தின் கசப்பு** எவ்வாறு ஒருவித வெறுப்பு நிறைந்த முறையிலே **(Ironically)** வெளியிடப்படுகின்றது. என்பதையும் பாடல்கள் காட்டுகின்றன. பாடல்கள் கனவில் நிகழ்ந்தவற்றைக் கூறுவன என்று கொள்ளாது, உண்மையாகவே காதலி தன் உள்ளத்தின் ஏமாற்றத்தை வெளியிடுவதனைக் கூறுவதாகக் கொள்ளவேண்டும்.

காலையில் எழுந்ததும் தோழி கேட்கின்றாள், "தலைவி, நேற்று மன்னனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாயே, நின்நெஞ்சும், நலனும், நாணும்கவர்ந்துசென்றான், இரவிலே நின்பால் வருவான் என்று நம்பிக்கொண்டிருந்தாயே, இரவில் வந்தனனா? அவனை நீ அணைந்தனையா?" என்று. தலைவியோ பெருந்துயராற் குமுறிக் கொண்டிருக்கின்றாள். தலைவனின் அகன்ற மார்பையும் அதிலே தோய்ந்த குளிர் சாந்தினையும், நறைதுளிர் அலங்கலையும் ஊர்வலத்தே தான் கண்டதை எண்ணி எண்ணி, அவற்றைப்போலத் தானும் அவனைத் தழுவிக்கிடக்கும் பேறு பெறவில்லையே என இதயம் ஏங்குகின்றாள். ஆனால், வழுதியோ, மன்னன்; முறை பிறழா நெறியினன்; காணும் குலமகளிரையெலாம் காதலித்துச் செல்வது அவன் வழக்கமின்று. அவளை அவன் காதலிப்பது உறுதியில்லை. அவன் கிட்டாத ஒருவன் என உணர்கின்றாள். எனினும் வேட்கை! எத்துணை பெருவேட்கை அவன் மேல்! ஊடவும் கூடவும் மனம் நாடுகின்றது. ஆயினும், வேட்கை ஏக்கமாகி, ஏக்கம் ஏமாற்றமாகி, ஏமாற்றம் மனக் கசப்பிலே முடிகின்றது. அவள் அம்மனக்கசப்பை வெளியிடும் முறைதான் பாடல்! வழுதியை எய்திலள், காரணம், அவன் வராமை; எனினும், கேட்கும் தோழியிடம் அவள் "அவன் வரவில்லை, எனவே நான் அவனது தோள்களை அடையவில்லை" என வறிதே கூறினாளில்லை. அவனை எய்தமுடியாத துயரத்தைத் தன் மனத்திருக்கும் பாரத்தில் ஏற்றி வேறு **காரணம் காட்டுகின்றாள்.**

"வழுதி வரவில்லை என்று நினைக்கின்றாய்! வழுதி வந்தானடி! ஆனால், நான் அவனை ஏன் எய்தவில்லை தெரியுமா? அவனைக் கண்டதும் நான் ஊட, அவன் உணர்த்த, நான் உணராததால் அவன் ஊடி உணரானாக, இவ்வாறு ஊடல் விளையும்போதே, போதும் விடிந்துவிட்டது. அவனும் அஞ்சிச் சென்றுவிட்டான். இதனால்தான் அவனை எய்தாது இராக் கழிந்தது" என்கின்றாள்.

ஒருவன், ஒரு சிறந்த நாடகத்தில் மிக விருப்பம் கொண்டு அதனைக் காணச் செல்கின்றான். ஆனால் அன்றிரவு ஏதோ காரணத்தால் நாடகம் நடத்தப்படவில்லை. எத்துணை மிகுந்த ஏமாற்றம் இருக்கும் அவனுக்கு! அந்த ஏமாற்றத்துடனே வீடு திரும்புகின்றான். திரும்புபவனை நண்பன் கண்டு, "நாடகம் காணவில்லையா?" என்று கேட்கின்றான். அவன் தன் ஏமாற்றத்தால் எழுந்த கசப்போடு, தான் நாடகத்தைக் காணமுடியாத உண்மையை வேறு விதமாகக் கூறுகின்றான். "ஆமப்பா, நாடகத்தைக் காணவில்லை நான். காணமுடியவில்லை! காரணம், கொட்டகையில் மிகுந்த கூட்டம், நெருக்கம், எனக்கு இடம் கிடைக்கவில்லை. திரும்பி விட்டேன்" என்று. இம்மாதிரி உரையாடல் நிகழ்வதை நாம் வாழ்க்கையிலே காண்கின்றோம்.

அதே உள்ள நிலையினின்றுதான் மங்கையும், தன் இரவு வறிதே கழிந்தமையைக் கூறுகின்றாள்.

அடுத்த பாடலும் இதுபோன்றது தான். வளவனைக் கண்ணாரக் கண்டறிந்திலள் அவள். ஏன் என்று கேட்கும் தோழிக்குப் பதில் கூறுகின்றாள். "நாங்கள் இருவரும் நேற்றிரவு கூடினோம்; எனினும் ஆரக்கண்டிலேன் அவனை நான்; காரணம், புலவியில் புறந்திரும்பியும், புல்லுங்கால் நாணியும், கலவியில் மயங்கியும் நானிருந்தமையால்" என்கின்றாள்! எத்துணை கசப்பு எழுகின்றது இங்கே! அவள் காதலனுடன் புலவி புரிந்தும், புல்லலும் கூடலும் பெற்றும் உவக்கவேண்டும் என்று கனவுபல கண்டிருக்கின்றாள்! அத்தனை கனவுகளும் நிறைவேற முடியாதவை. அதனை அறிகின்றாள்; எனவேதான் அவனைக் கண்ணாரக் கண்டறியாமையைத் தன் பொசுங்கிப்போன கற்பனைகளின் மேலேற்றிக் கூறுகின்றாள்.

இவ்வாறு, இப்பாடல்கள், பல பொருட் பேதங்களைத் தம்மகத்தே கொண்டு விளங்குகின்றன. ஒரு நிலையினின்று காணும்போது, கனவிலும் தன் ஆவல் நிறைவேற முடியாது காதலி படும் ஏக்கத்தையும், இன்னொரு நிலையில் அவளது கற்பனைகள் முன்னேக்கிச் செல்லும் அமைப்பையும், இன்னொரு நிலையில் ஏமாற்றமடைந்த உள்ளத்தின் மனக்கசப்பையும் காட்டுவதாக விளங்குகின்றன.

காதலினால், பெண் உள்ளத்தில் ஒரே பொழுதில் பல உணர்ச்சிகள் குழம்பியும் பிரிந்தும் கிடப்பது போலக் காதலை விளக்க வந்த இப்பாட்டிலும், பல உணர்ச்சிகளைத் தெரிவிக்கும் பொருள்கள் பொதிந்து கிடப்பது போற்றற்குரியது, வியத்தற் குரியது. ★

திருமண அழைப்பு

பேரன்புடையீர்! வணக்கம்.

நாளது திருவள்ளுவர் ஆண்டு 1899. ஐப்பசித் திங்கள் 10-ம் நாள் (26-10-56) வெள்ளியன்று காலை 9 மணியளவில் திருவீழிமிழலை மணமகள் இல்லத்தில் திருவாளர். எஸ். கல்யாண சுந்தரம் அவர்களது

திருநிறைச் செல்வி **பரமேஸ்வரியை**

அறிஞர் அண்ணா *அவர்கள் தலைமையில்*

எனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளவிருக்கிறேன். அதுபோது தாங்கள் வந்திருந்து மணவிழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அன்பன்,

V. சிவப்பிரகாசம், பி. ஏ., பி. எல்.

சேலம்
2-10-56

கட்சிக்குள் கட்சியா?

தமிழ்நாட்டில் அடுத்து உருவாகப் போகும் எதிர்க்கட்சி எது? அதன் இலட்சணங்கள் என்ன? அந்த இலட்சணங்கள் எப்படி இருக்க வேண்டும்?- என்றெல்லாம் சில நாட்களாகப் பெருந்தலைவர்கள் - மக்களை விட்டுத் தாளுக விலகிப் போனவர்களிலிருந்து மக்களால் துரத்தப்பட்டவர்கள்வரை அத்தனை பெரியவர்களும் பேசிக்கொண்டு வருகிருர்கள்.

நாட்டின் எதிர்காலத்தில் அக்கறை கொண்ட முதியவர்கள், "தமிழ்நாட்டில் நல்லதோர் எதிர்க் கட்சி உருவாக வேண்டும்; அது மக்களின் பேராதரவைப் பெற்று மக்களின் எண்ணங்களை அரசியல் ஆக்க மன்றங்களில் பிரதிபலிக்கச் செய்யக்கூடிய கட்சியாக இருக்க வேண்டும்" என்று பொதுக் கூட்டங்களிலே பேசி வருகிருர்கள். அவர்கள் பேச்சிலிருந்து, 'எதிர்க் கட்சிதான் ஜனநாயகத்தின் மெய்க் காப்பாளன்' என்பதைச் சிந்திக்கும் திறன்படைத்தோர் புரிந்துகொள் கிருர்கள். ஜனநாயகம் பாதுகாக்கப் பட வேண்டுமென்ருல் காங்கிரஸ் முறியடிக்கப்படவேண்டும் என்று தான் பொருள் என்ருலும், 'நல்லதோர் எதிர்க்கட்சி மக்களுக்குத் தேவை என்ருல்' 'ஆளும் கட்சிக்கு ஒரு எதிர்க்கட்சி தேவை; ஆளுவோர் யாராயிருந்தாலும் கவலையில்லை-என்ற பெருநோக்குத்தான் நம் கருத்துக்குப் படுகிறது.

இதே நேரத்தில் வேறு சில தலைவர்கள் வேறு விதமான கருத்தைக் கொட்டிக்கொண்டிருக் கிருர்கள். இவர்களிடமிருந்து தொனிக்கும் குரலிலே மட்டுமல்லாமல் கருத்திலும் பேதம் ஏற்படுகிறது.

"தமிழ்நாட்டில், வேறு கொள்கையுள்ள எந்தக் கட்சியும் வலுப் பெற்றதாக இல்லை; எனவே காங்கிரசுக்குள்ளேயே ஒரு எதிர்க்கட்சி வேண்டும்" என்பது இரண்டாவதாகக் கிளம்பியிருக்கும் விசித்திரமான கருத்து. இது எந்தக் கருத்தைச் சினைப்பொருளாகக் கொண்டதாக இருந்தாலும், வட தேசத்திலும், இந்தியத் துணைக் கண்டத்துச் செய்திகளைப் பத்திரிகைகளின் வாயிலாக மட்டும் படித்துத் தெரிந்துகொள்கிற பிற தேசங்களிலும், 'காங்கிரசை எதிர்க்க வேறு கட்சி இந்தியாவில் இல்லை;நேருஜி கட்சிதான் நேர்மையான கட்சி!" என்ற தவருன பிரச்சாரத்திற்கு விதை தூவும் என்பது மட்டும் உறுதி. தட்டிக் கேட்போரும், வெட்டிப் பேசுவோரும் தலையெடுக்க முடியாத வகையில் மக்களின் பேராதரவைக் காங்கிரஸ் கட்சி பெற்றிருக்கும் போது, எதிர்க்கட்சி என்று ஒன்று அவசியந்தாஞ என்று தங்களுக்குத் தாங்களே உணர்ந்து புரிந்துகொள்வோர்தான், 'காங்கிரசுக்குள்ளேயே எதிர்க்கட்சி வேண்டும்' என்ற கருத்தின் உட்பொருளைத் தெரிந்து கொள்ளமுடியும்.

காங்கிரசுக்குள் எதிர்க்கட்சி - அதாவது கட்சிக்குள் கட்சி! புதிது புதிதாக சிறிய சிறிய தலைமை ஸ்தானங்களைத் திசைக்கு மூன்ருக ஒரேகட்சியில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுவோரின் கெடுமனத்தில் முளைவிட்ட எண்ணங்களில் ஒன்றுதான் இந்தத் திட்டம் என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். ஆனல் இந்த எண்ணம் - திட்டம் - உருப்பெறுவது கூடாது என்ருலும், அந்தத் திட்டம் உருப்பெற வழி இருக்கிறதா?-திட்டத்தைக் கக்கியவர்கள் சிந்தித்தார்களா என்று புரியவில்லை.

எதிர்க்கட்சியின் தொண்டு என்ன? அது ஒரு கட்சியின் உட்கட்சியாக இருக்கமுடியுமா?

மக்கள் கருத்து திரண்டு ஒரு உருவம் பெறுவதற்கு உதவும் கட்சி எதுவோ,

மக்கள் கருத்து என்ற முதுகெலும்பை நிமிர்த்தி நிறுத்தும் கட்சி எதுவோ,

மக்கள் கருத்தை அரசாங்கம் கேட்குமாறு செயல்படும் கட்சி எதுவோ அதுதான் எதிர்க்கட்சியாக இயங்கமுடியும். இந்த இலட்சணங்களை, ஆளும் கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சிக்குள் ஒரு குழுவினரிடம் எப்படி எதிர்பார்க்கமுடியும்? ஒரு கட்சியின் ரகசியக் கூட்டத்தில் அல்லது காரியக்கமிட்டிக் கூட்டத்தில் ஒரே கட்சியைச் சார்ந்தவர்கள் எதிர்த்துப் பேசிக்கொண்டால் - கருத்து மாறுபாட்டினல் வாதங்களைக் கிளப்பிக்கொண்டால்,அந்த வாதங்களும் எதிர்ப்புகளும் கட்சியின் நோயைக் குணப்படுத்தப் பயன்படலாம். நெளிவையும் வளைவையும் சரிப்படுத்த உபயோகப்படலாம்; ஆனல் பொதுச்சபையில்-மக்களின் சபையில் காங்கிரசுக்குள் ஒரு எதிர்க் கட்சியைச் சட்ட ரீதியாக அமைக்க முடியாதே!

அதற்கு வழி? அறிஞர் அண்ணு அவர்கள் இரண்டு திங்கள்களுக்கு முன்பு சென்னையில் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டதையும், காங்கிரசுக்குள் ஒரு எதிர்க்கட்சி வேண்டும் என்று சில 'தீர்க்கதரிசி'கள் இப்போது சொல்லியிருப்பதையும் தொடர்பு படுத்திப் பார்த்தால் ஒரு வழி-ஒரே ஒரு வழி இந்தப் புதிய விஷக் கொள்கைக்குத் துணைபுரிவதாகத் தெரிகிறது.

"காங்கிரஸ் கட்சியின் மேலிடத்திலே உள்ளவர்களும், பல முக்கிய தலைவர்களும் நடந்துகொள்கிற முறைகளிலிருந்தும், அவர்களுடைய சொற்பொழிவுகளிலிருந்தும், எனக்கு ஒரு உண்மை தெரிய வருகிறது. அடுத்து வரப்போகும் பொதுத் தேர்தல்தான் இந்த நாட்டின் கடைசிப் பொதுத் தேர்தலாக இருக்குமோ என்று பயப்படுகிறேன்" என்று சொன்னர் அறிஞர் அண்ணு.

காங்கிரசுக்குள்ளே எதிர்க்கட்சி வேண்டுமென்ருல், சட்டசபை முழுதும் காங்கிரஸ்காரர்களாக இருக்கவேண்டும். அவ்வாறு நிரம்பியிருந்தால்தான் காங்கிரஸ் கட்சியாகப் பார்த்து சில காங்கிரஸ்காரர்களை எதிர்க்கட்சியாக அமைக்கமுடியும். வேறு கொள்கையினர் எதிர்க்க வகையில்லாத போதுதானே காங்கிரஸ் கட்சி தாளுக ஒரு எதிர்க்கட்சியை உருவாக்கமுடியும்:? வாக்குப் பெட்டிகள் உள்ளவரை அப்படி ஒரு மானக்கேடான நிலை தமிழ்நாட்டுக்கு வராது என்பது திண்ணம் என்பதை உணர்ந்துதான் புதிய புதிய திட்டங்கள் எங்கெங்கோ இருந்து கிளம்புகின்றன.

...அண்ணு அவர்கள் தொடர்ந்து பேசுகையில், "காங்கிரஸ் கட்சி இனி மேற்கொண்டு மறைமுகத் தேர்தலை விரும்புவதாகத் தெரிய வில்லை. ஊருக்கு நாலு பெரிய மனிதர்களைக் கூட்டி அவர்களில் ஒருவரைப் பார்த்து "நீர்தான் இந்தத் தொகுதிக்கு எம் எல். ஏ. என்று நியமித்துவிட நினைக்கிருர்கள். ஏனென்ருல் அவர்களது சமீப காலத்திய நிகழ்ச்சிகள் நமக்குச் சொல்கின்றன" என்று குறிப்பிட்டார்.

அண்ணு அவர்கள் குறிப்பிட்டபடி மறைமுகத் தேர்தல் ஒழிக்கப்பட்டு, பெரியவர்களால் - வாயில்லாப் பூச்சிகளை அடக்கிக்கொண்டிருக்கும் ஒருசில பெரும் புள்ளிகளால் எம். எல். ஏக்கள் நியமிக்கப்படுவார்களோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது. அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் சட்டசபை முழுதும் காங்கிரஸ்காரர்களாக வர முடியும். அவர்களுக்குள்ளேயே எதிர்க்கட்சியை நிறுவமுடியும். இந்தச் சூது காமராசருக்குப் புரியாதிருக்கலாம். நேருவுக்குப் புரிந்திருக்கும். ஏனென்ருல் அவர் நெடுநாட்களாகவே 'எம். எல். ஏ. நியமன' முறையை மறைமுகமாக ஆதரித்து வருபவர்.

அப்படி ஒருமுறை - ஜனநாயகத்தைக் கொல்லும் நியமன முறை தேவை என்பதை வலியுறுத்தும் வகையில் தான் இதுபோல ஒரு எதிர்க்கட்சி வேண்டுமென்று சிலர் சூசகமாகச் சுட்டிக் காட்டுகிருர்கள் போலும்.

ஒரே கட்சி அரசைக் கொண்டு செலுத்துமாஞல் நிலைமை என்னவாகும், என்பதை காங்கிரஸ்காரர்களில் படித்தவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

காங்கிரசுக்குள் ஒரு எதிர்க்கட்சி உருவாகிவிடும் என்று பயந்து இங்கே இதை நாம் குறிப்பிட வில்லை. அதுபோல் ஒரு எண்ணமே ஜனநாயக நாட்டில் உண்டாகக் கூடாது என்பதை நினைவுபடுத்த நாம் விரும்புகிருேம். ★

★ பெரியார்-அண்ணு முதல் சந்திப்பு! ★

அப்போதுதான் அண்ணு பி. ஏ. ஆனர்ஸ் பரீட்சை எழுதியிருந்தார். முடிவு இன்னும் வெளியாகவில்லை. அப்போது திருப்பூரிலே செங்குந்தர் மாநாடு ஒன்று நடந்தது. அதிலே அண்ணுவும் கலந்துகொண்டார். சுயமரியாதை இயக்கத்தை விட்டு ஜீவானந்தம் முதலியோர் விலகிய சமயம். திருப்பூரில் நடந்த அந்தச் செங் குந்தர் மாநாட்டிற்குப் பெரியார் இராமசாமியும் வந்திருந்தார். அண்ணு அவர்களை மாநாட்டுத் தலைவர் பேச அழைத்தார். அண்ணு அவர்களுக்கு அதுதான் முதல் பொதுமேடை. அண்ணு தைரியமாகப் பேசினர். சபைக் கூச்சமின்றிப் பேசினர். அழகழகான வார்த்தைகளை அடுக்கடுக்காக அள்ளிச் சொரிந்தார்.

அப்போது வடக்கே கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி டாக்டர் அன்சாரி தலைமையில் சட்டசபையில் பிரவேசிப்பது என்ற தீர்மானத்தை நிறை வேற்றி இருந்தது. அதைக் குறிப்பிட்டு அண்ணு பேசும்போது, "இனி காங்கிரஸ் கட்சியின் செல்வாக்குக் குறையும்; உணர்ச்சிகரமான வேலைத்திட்டம் தடைப்படும். தொண்டர்களின் உள்ளம் வழிதப்பிப் போகும்." என்றெல்லாம் ராஜதந்திர முன் யோசனைகளோடு குறிப்பிட்டார். அவர் பேசப் பேச பெரியார் இராமசாமி, தன் பக்கத்திலிருந்தவரிடம் அண்ணுவைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தார். பிறகு அண்ணு அவர்களிடமே நேரடியாகக் கேட்டார். அண்ணு பெரியாரிடத்துப் பணி புரியச் சம்மதித்தார். உடனே அடுத்த துறையூர் மாநாட்டுக்கு அண்ணுவையே தலைவராகப் போட்டுவிட்டார் பெரியார். அந்தத் துறையூர் மாநாட்டில் அண்ணுவை அறிமுகப்படுத்திப் பேசிய பட்டுக்கோட்டை அழகிரி, "ஜீவானந்தங்கள் போய் விட்டார்கள் என்பது பற்றி இனி நாம் கவலைப்படத் தேவையில்லை. இதோ ஒரு அரசியல் நிபுணன் நமக்குக் கிடைத்துவிட்டான்!" என்று ஆவேசமாக உணர்ச்சி யோடு பேசினர். அதுமுதல் எல்லா மாநாடுகளிலும் கூட்டங்களிலும் அண்ணு வுக்கே முதலிடம் கொடுத்து எல்லோரும் பேசலானர்கள்.

ஆம்! அண்ணுவுக்குக் கிடைத்த புகழ் அவர் விரும்பி, தேடியலைந்து பெற்ற தல்ல; இன்று தூற்றும் அதே வாய்கள் மனங்கனிந்து உண்மையறிந்து வலியவந்து கொடுத்ததாகும்.

★ ★

ஸ்டாலினைப் பற்றி குருஷேவ்!

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸில் ஸ்டாலினைப் பற்றி குருஷேவ் சமர்ப்பித்த ரகசிய அறிக்கை அம்பலத்திற்கு வந்துவிட்டது. அந்த அறிக்கையின் பெரும் பகுதி பத்திரிகைகளில் வெளிவந்தது. எனினும் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை மறுத்து இன்று வரையில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி எத்தகைய அறிக்கையும் வெளியிடவில்லை. எனவே பத்திரிகைகளில் வெளிவந்த தகவல்கள் உண்மையாகத்தான் இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வருவதில் தவறில்லை.

குருஷேவ் அறிக்கை அரசியல் சூறாவளியை எழுப்பி இருக்கிறது. நேற்றுவரையில் உலகிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் நம்பி வந்த - பிரசாரம் செய்துவந்த அத்தனையும் பொய் என்று பறைசாற்றுகிறது குருஷேவ் அறிக்கை.

கம்யூனிஸ்ட் கட்சிகளின் அமைப்பும், கம்யூனிஸ்ட் கட்சிகள் மேற்கொள்ளும் முறைகளும் தவறுகள் நிறைந்தவை என்பதற்கு குருஷேவ் அறிக்கை சான்று.

★

ஸ்டாலினிஸத்தை ஏற்காதவர்களை, மாஸ்கோ தலைமையைக் கண் எதிர்த்தார். எனவே ஸ்டாலின் வளர்த்த தனி மனிதன் ஆராதனைத் தத்துவம் மார்க்சிஸத்திற்கு முற்றிலும் முரணானது. ஆனால் மார்க்சிஸம் – லெனினிஸத்தின் வாரிசுகளென்றும் தங்களைத் தாங்களே வர்ணித்துக்கொள்ளும் உலகம் முழுவதிலுமுள்ள கம்யூனிஸ்டுகள் கடந்த இருபது வருடங்களாக ஸ்டாலின் அனுஷ்டித்து வந்த தனி மனிதன் ஆராதனைத் தத்துவத்தை எதிர்த்து ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை என்பதும், ஸ்டாலினைப் பற்றிக் குருஷேவ் சமர்ப்பித்த அறிக்கைக்குப் பிறகு செய்வதென்னதென்று அறியாது திக்குமுக்காடுகின்றனர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

உள்கட்சி ஜனநாயகம், சுயவிமர்சனம் என்பன போன்ற பதங்கள் கம்யூனிஸ்டுகள் சம்பந்தப்பட்டவரையில் அர்த்தமற்றவை என்பதற்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் சரித்திரமும், பிறநாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகளின் சரித்திரமும் சாட்சி. ஓர்ஜோனிகிட்ஸே, போஸ்டிஷெவ், வோஸ்னே ஸென்ஸ்கி, குஸ்னெட்ஸோவ் போன்ற சோவியத் கம்யூனிஸ்ட் தலைவர்கள் "மக்கள் விரோதிகள்" என்ற குற்றச்சாட்டின்மீது எந்தவிதமான விசாரணை கூட அசைக்கவில்லை. கொடுமைகளையும், அநீதிகளையும் சகிக்கமாட்டாது கிழக்கு ஜெர்மானியத் தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்த பொழுது, உரிமைக்காகக் கிளர்ந்தெழுந்த தொழிலாளர்களை ஆதரித்து, கிழக்கு ஜெர்மானியக் கம்யூனிஸ்டுகள் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. ஸ்டாலினுடைய பாதார விந்தங்களில் விழுந்துகிடக்க மறுத்த டிட்டோவை அழிக்க ஸ்டாலின் திட்டமிட்ட பொழுது, இதைக் கண்டித்து எந்தக் கம்யூனிஸ்ட் தலைவரும் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. "ஏகாதிபத்திய ஏஜண்ட்" என்று அன்னாலூயிஸ் ஸ்ட்ராங்குக்குப் பட்டம் சூட்டப்பட்ட பொழுது, அமெரிக்க கம்யூனிஸ்டுகள் இதைக் கண்டித்து ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. ஆன்ட்ரி மார்ட்டி அவமதிக்கப்பட்ட பொழுது, அதைக் கண்டித்து பிரெஞ்சு கம்யூனிஸ்டுகள் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. இவை எதைக் குறிக்கின்றன? உலகிலுள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகள் யந்திர ரீதியாகச் செயல்படுகின்றன என்பதையும், உலகிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் சிந்திக்கும் சக்தியை அடகு வைத்துவிட்டன என்பதையும், மாஸ்கோ காட்டும் இருக்கவில்லையல்லவா? எனினு இந்தக் கட்சிகள் ஸ்டாலின் மேற் கொண்ட நடவடிக்கைகள் அத்தனையையும் கண்ணை மூடிக்கொண்டு அங்கிகரித்ததேன்? ஸ்டாலின் புரிந்த படுகொலைகளை நியாயப் படுத்த இந்தக் கட்சிகள் பெரு முயற்சி செய்ததேன்? மக்கள் ஜனநாயக ஆட்சிமுறைக்கே முன்மாதிரி யாகக் கருதப்பட்ட யுகோஸ் ஸாவியாவை சோஷலிஸத்தி லிருந்து சறுக்கி விழுந்த நாடென்று 1948-ஆம் வருடம் ஸ்டாலின் பிரகடனப்படுத்தியதும் யுகோஸ் லாவியாவை "தீண்டத்தகாத" நாடென்று இந்தக் கட்சிகள் வர்ணித்ததுமேன்? இந்தக் கேள் களுக்கெல்லாம் குருஷேவ் உட்பட இன்றுவரையில் யாரும் பதி சொல்லவில்லை.

இங்கே ஒரு முக்கியமான கேள் எழுகிறது? ஸ்டாலினுடைய கைக ரத்தக்கறை தோய்ந்தவை என்று குருஷேவ் கூறுவதைப் போன் ஆயிரக்கணக்கான நிரபராதிகளை ஸ்டாலின் கொன்று குவித்தா என்றால், சோஷலிஸ்ட் நீதிக் முற்றிலும் முரணான முறையில் ப பயங்கரமான நடவடிக்கைகளை ஸ்டாலின் மேற்கொண்டா என்றால், இத்தகைய வெறுக்க

மார்க்ஸிஸத்தை விபசாரம் செய்கிறது கம்யூனிஸ்ட் கட்சி!

முடித்தனமாக அங்கிகரிக்காதவர்களை, தனி மனிதன் ஆராதனையை ஒப்புக்கொள்ளாதவர்களை, மாஸ்கோ பாதை ஒன்றுதான் சோஷலிஸ்ட் பாதை என்னும் முட்டாள்தனமான கொள்கையை மேற்கொள்ளாதவர்களை "முதலாளித்வ ஏஜண்டுகள்", "சோஷலிஸத்தின் விரோதிகள்", "ஏகாதிபத்திய ஏவல் நாய்கள்" என்றெல்லாம் ஸ்டாலினும், அவருடைய பக்தகோடிகளும் வர்ணித்த காலம் ஒன்றிருந்தது. ஆனால் இன்று அந்தக் காலம் மலையேறிவிட்டது.

இந்தப் பதங்கள் எல்லாம் தமது எதிரிகளை நிர்மூலம் செய்வதற்காக ஸ்டாலின் சிருஷ்டி செய்த பதங்கள் என்பதையும் இந்தப் பதங்களின் உதவியுடன் தான் கணக்கற்ற நேர்மையான கம்யூனிஸ்டுகளை ஸ்டாலின் கொன்று குவித்தார் என்பதையும் குருஷேவ் தெளிவு படுத்திவிட்டார். எனவே, இந்தப் பதங்கள் இன்று காலம் கடந்த பதங்களாய் விட்டன.

★

தனி மனிதனோ, தலைவரோ சரித்திரத்தைச் சிருஷ்டி செய்யவில்லை; ஆனால் ஜனங்கள் சரித்திரத்தைச் சிருஷ்டி செய்கிறார்கள் என்பது மார்க்ஸ் ஆராய்ந்து தேர்ந்த முடிவு. தனி மனிதன் ஆராதனைத் தத்துவத்தைத் தமது காலத்தில் மார்க்ஸ் உக்ரமாக யுமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்ட பொழுது சோவியத்யூனியன் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இந்தப் படுகொலைகளைக் கண்டித்து தங்கள் சுண்டுவிரலைக்கூட அசைக்கவில்லை. ஸ்லான்ஸ்கி "துரோகி", "டிட்டோயிஸ்ட்" என்ற குற்றச்சாட்டின்மீது சுட்டுக் கொல்லப்பட்ட பொழுது, இந்தக் கொலை பாதகத்தைக் கண்டித்து ஜெக்கோஸ்லோவாகிய கம்யூனிஸ்ட் தலைவர்கள் தங்கள் சுண்டுவிரலைக் கூட அசைக்கவில்லை. ராஜக் இரக்கமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்ட பொழுது, இந்தக் கொடுமையைக் கண்டித்து ஹங்கேரிய கம்யூனிஸ்டுகள் தங்கள் சுண்டுவிரலைக்கூட அசைக்கவில்லை. அன்னுபாக்கர் அகாரணமாக அவமதிப்புக்கு ஆளானபொழுது ருமேனிய கம்யூனிஸ்டுகள் இந்த அக்கிரமத்தைக் கண்டித்து தங்கள் சுண்டுவிரலைக் வழிதான் சரியான வழி என்ற மூட நம்பிக்கைக்கு உலகிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆட்பட்டுவிட்டன என்பதையும் மேற்கூறிய நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஸ்டாலின் உயிருடன் இருந்த காலத்தில் ஸ்டாலினை எதிர்த்துப் பேசும் மனோதிடம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு இல்லாமல் இருந்திருக்கலாம். ஏனெனில் ஸ்டாலினை எதிர்த்தவர்களின் கதி இவர்களுக்கு எச்சரிக்கையாக இருந்திருக்கலாம். கிழக்கு ஐரோப்பிய மக்கள் ஜனநாயக நாடுகளிலும் இதே நிலை அன்று குடிகொண்டிருந்ததால், அங்குள்ள தலைவர்களும் மௌனம் சாதித்திருக்கலாம். ஆனால் இத்தாலி, பிரான்ஸ், பிரிட்டன், இந்தியா முதலிய முதலாளித்வ நாடுகளில் இயங்கிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு இத்தகைய ஆபத்து தக்க செயல்கள் புரிய அவரை அனுமதித்த அமைப்பு அழிக்கப்பட வேண்டிய அமைப்பல்லவா? மனம் போன போக்கில் படுகொலைகள் புரிய இருபது வருடங்கள் ஸ்டா லினை அனுமதித்த சக்தியை நி மூலம் செய்யவேண்டாமா? தன் மனிதன் தலைமைத் தத்துவம் தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்று சொல்லி, இந்த அடிப்படையான பிரச்சினைகளை யாரும் தட்டி கழித்து விடமுடியாது.

தவறுகள் செய்வதும், தவறுகள் செய்த சிறிது காலத்திற்குப் பிற அந்தத் தவறுகளைப் பகிரங்கமா ஒப்புக்கொள்வதும், அடிப்படை யான பிரச்சினைகளிலிருந்து தப் வதற்கு கம்யூனிஸ்ட் கட்சிக கையாளும் வழக்கமான தந்திரம் தவறுகளை ஒப்புக்கொண்டு விடு தால் மாத்திரம் பிரச்சினை தீர்ந் விடாது. தவறுகள் செய்யாதவர்க உலகில் யாருமில்லை. தவறு செ வது மனித இயல்பு. ஆனால் தவ களை ஒப்புக்கொள்வதுடன் நின் விடாது, அந்தத் தவறுகள் ஏற்பட தற்கான காரணங்களைக் கண் பிடித்து, மீண்டும் அத்தகை தவறுகள் நேராமல் பார்த்து கொள்வதுதான் லெனின் காட்டி வழி. இந்த வழியிலே கம்யூனிஸ் கட்சிகள் செல்லவில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கடந் இருபத்தைந்து வருட சரித்திர இதற்குச் சாட்சி.

— 9-ம் பக்க

இந்தக் கட்டுரையாளர் **ஆர். ராமனுதன்,** தமிழ்நாடு பொதுவுடமைக் கட்சியில் தீவிர உறுப்பினராயிருந்தவர். தனி மனிதனைத் துதி பாடுவதே, கட்சியின் நோக்கமாயிருந்ததால் வெளியேறியவர். தமிழ்நாடு கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஏராளமான பிரசார நூல்கள் எழுதித்தந்த இவர், 'ஸ்டாலினைப் பற்றி குருஷேவ்' என்ற தன் நூலுக்கு எழுதிய முன்னுரையின் பெரும் பகுதி இது. தமிழ்நாடு கம்யூனிஸ்ட் 'பிண்டங்கள்' படித்து அறிவு பெறவேண்டிய நூல். கிடைக்குமிடம்: **பொதுமேடைப் பதிப்பகம், சென்னை - 4.** விலை அணு 12.

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 3 ‖ 20—10—56 ‖ இதழ் 8

கொலைக் குற்றம்!

அவர் உயிர் பிரிந்துவிட்டது. 'கோரிக்கை வெற்றி – இன்றேல் கொடுப்பேன் உயிர்' என்ற உயிர் மரணப் போராட்டத்தில் குதித்திருந்த் விருதுநகர் சங்கரலிங்கனுரின் ஆவி, பரிபாலனம் செய்யும் பக்குவமற்ருேரால் பிரிக்கப்பட்டு விட்டது. 'ஏன் செத்தார்? எப்படிச் செத்தார்? யார் அதற்குப் பொறுப்பாளி? என்று எவரும் கேட்கின்ற வகையிலா அவர் கண்களை மூடினுர்!

துப்பாக்கித் துரைத்தனம் நடத்தும் 'தூயவர்'களே, தாய்நாட்டின் மானம் காக்க என் கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள். நீங்கள் எப்படியோ தெரியவில்லை; நான் அந்தக் கோரிக்கைகளை என் உயிருக்கு மேலாக மதிக்கிறேன். வெற்றி பெறுவது அல்லது பட்டினி கிடந்து சாவது என்ற அசைக்க முடியாத முடிவுக்கு வந்துவிட்டேன் என்று 77 நாட்களாகப் பட்டினி கிடந்து கடந்த 13-ம் தேதியன்று உயிர் நீத்துவிட்டார். அந்த இலட்சியச் சாவுக்குக் காரணமாக இருந்த அரசியலார் அலட்சியமாக இருப்பதை மனித மனம் படைத்தோர் கண்டிக்காமலிருக்க முடியாது. வாழ்வதற்கே பிறந்த ஒரு ஜீவன், இன்ன காரணத்திற்காக நான் சாகப் போகிறேன் என்று முன்கூட்டியே அறிவித்திருந்தும் ஊராளும் பெரியவர்கள் உலோகத்தால் செய்யப்பட்ட காதினராக இருப்பதென்ருல், அரசுதான் ஏன், அந்த அரசுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட சமுதாய ஒப்பந்தம்தான் எதற்காக? இட்டதே சட்டம் என்பதே உள் எண்ணமானுல், 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற மாக்கிய வில்லியின் சித்தாந்தமே நாட்டையாளும் என்று பிரகடனப்படுத்தி விடலாமே! அப்படியென்ன கேட்டு விட்டார் சங்கரலிங்கனுர்? இல்லாத தேவலோகத்தை விருதுநகருக்கு இறக்கிவா என்ருரா? இந்திரனும் சந்திரனும் என் முன்னே கதகளி நடனம் ஆடவேண்டும் என்று சொன்னுரா? நீ பிறந்த நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கக்கூடாதா என்று கேட்டார். கோலோச்சும் கனவான்கள் டாம்பீகத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ளக்கூடாதா என்று இடித்துக் காட்டினுர். இப்படி, நிறைவேறக் கூடிய 12 கோரிக்கைகளை முன் வைத்துப் பட்டினிப் போர் தொடங்கினுர். இவைகளில் எத்தனைதான் டில்லியின் அதிகாரத்தில் இருக்கின்றன? காமராசரால் எளிதில் நிறைவேற்றி வைக்கக்கூடிய மீதமுள்ள கோரிக்கைகளாவது கவனிக்கப்பட்டனவா? 'எங்களுக்கு அதிகாரமில்லையே, பின் எப்படி ச்சங்கரலிங்கரின் சாவைத் தடுக்கமுடியும் எங்களால்' என்று சொல்லிவிட்டுக் கூடத் தப்பிக்க வழியில்லையே! தங்களால் முடித்துவைத்துவிடக் கூடிய சாதாரணக் கோரிக்கைகளுக்காகவே ஒரு மனிதன் – காந்தீயம் வளர உழைத்தவர் - காந்தியாரே எனக்கு இதயநாதன் என்று சாகும் வரை புலம்பிக்கொண்டிருந்தவர் சாகடிக்கப்படுகிருர் என்ருல் யார் இந்தக் 'கொலை'க்குப் பொறுப்பாளி? மக்கள் சக்தி அரசியலாரின்மீது குற்றப் பத்திரிக்கையை வாசிக்கிறது. சங்கரலிங்கனுரின் உயிர் சென்னை அரசியலாரால் 77 நாட்களாக அணு அணுவாகச் சிதைக்கப்பட்டது என்று மக்கள் குற்றம் சாட்டுகிருர்கள். கண்களை மூடிக் கொண்டு காமராசரைப் பாராட்டும் தலைவர்கள் நீங்கலாக நல்ல இதயம் படைத்த மக்கள் தலைவர்கள் அனைவருமே, "காமராசரே இது அடுக்குமா?" என்று கேட்கிருர்கள். தனிப்பட்ட ஒரு மனிதனுக்குத் தலை குனிவதா என்ற திமிரில்தான் காமராசர் சர்க்கார் கண்மூடி மௌனியாக இருந்தது என்ருல், வரப் போகும் தேர்தல் களறியில் எதிர்ப் படைகள் அத்தனைக்கும் சங்கரலிங்கரின் ஆசி தலைமையேற்று வெற்றி பெற்ருலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று 'அங்கானமான' ஆட்சி பீடத்திற்கு நினைவுறுத்துகிரேம்.

தேர்தல் வருகிறது: தெரிந்துகொள்ளுங்கள்!

3. இராமநாதபுரம் சேதுபதி

"ஐயாவே! நானேர் அப்பாவி! எனைப்பற்றி
மெய்யான செய்தி விளங்கவிட்டுக் கொல்லாதீர்!
ஒய்யார வாழ்வும் உல்லாசப் பந்தயமும்
கண்டேனல் லாமற் கருத்தோடு நாடாளச்
சுட்டுப் போட்டாலும் துளியும் தெரியாது!
பின்வாச லேறிப் பிழைத்திருந்த ராஜாஜி
என்னவோ எண்ணி எனக்களித்த பதவியினை
விளையாட்டாய் எண்ணி வீற்றிருந்தேன்; பின்வந்த
காமராசர் கூடக் கருணைவைத்த காரணத்தால்,
இன்று வரைக்கும் இருக்கின்றேன்; என்ருலும்
கையெழுத்துப் போட்டுக் களைப்பதல்லால் மற்றுமொரு
காலெழுத்தும் ஆட்சிக் கடமை அறியேன்நான்!
காங்கிரசார் போராட்டம் களைவடித்த நாட்களிலும்
தாங்கிஒரு போராட்டம் சாமீ! நான் செய்ததில்லை
காந்தியார் வெஞ்சிறையிற் கவலையுற்ற வேளையிலும்
சாந்திமிகும் வாழ்வில் சௌக்கியமாய்த் தானிருந்தேன்.
'உப்'பென்று காங்கிரசார் ஓடியதோர் காலமதில்
மெத்தென்ற பஞ்சணையில் மேனி அலுங்காமல்
நித்திரைக்குத் தூதாகி, நேசக் கரம்விரித்து(ப்)
பெண்டாட்டி பிள்ளை பெருகிவர வாழ்ந்திருந்தேன்
காலுக்கு நீர்விட்டுக் கழுவஒரு பணியாளும்
மேலுக்கு எண்ணெய்விட்டு விளக்கஒரு தொண்டனுமாய்
காற்ருடிக் கீழே, கவலையின்றிப் பட்சணங்கள்
உண்டு களித்து உறங்கினேன்! ஆனுலும்
தொல்லையெலாம் பட்ட தூயர்களை விட்டுவிட்டு
பணம்படைத்தேன் என்பதனுற் பக்தவமாய் எனையழைத்து
"இந்தா பிடி" என்ருர் ஸ்ரீராமர் வீடணர்க்கு
"இந்தாபிடி" என்று இலங்கையினைத் தந்ததுபோல்!
தந்தால் மறுப்பார்நம் தாயகத்தில் உள்ளாரோ?
தள்ளிவிட நானென்ன தரங்குறைந்த சேவகனு?
ஏற்றேன் பணியை! எப்படிநான்! இப்பொழுது
வர்ணக் கொடிபறக்க வாட்டமிகும் காரேறி
சொர்ணச் சிலைபோலச் சுற்றுகிறேன் ஊரெல்லாம்!
மந்திரி யென்ருலே மாதம் இருபதுநாள்
ஊர்சுற்றும் பொய்மையெனும் உண்மை யறியீரோ!

அது போக,

தட்சிணப் பிரதேசச் சண்டையிலே நான்கொஞ்சம்
'தண்டால்'கள் போட்டேன்; 'ஜம்பம்' பலிக்கவில்லை!
ராஜாஜி ஓர்நாள் ரகசியமாய்ச் சொன்னதனுல்
அவர்பக்கம் பேசி ஆர்ப்பரித்தேன்; பின்புஎங்கள்
காமராசர் கண்கள் கனல்கக்கப் பார்த்ததனுல்
அடியிடா 'பல்டி'யென அடித்தேன் மறுநாளே!
பல்டி யடித்த பவிசுகளைப் பார்த்துவிட்டுத்
தம்மிடத்தே வரும்படிக்கு சர்க்கஸ்காரர் சிலபேர்
எழுதினுர் என்ருலும் இன்றுவரை போகவில்லை!
அரசியலில் பல்டி அடிப்பதுபோல் வேறிடத்தில்
அடித்தாலும் தினசரிகள் அவ்வளவாய்ப் போடாவே!
ஆகையினுல் என்னை அலட்சியமாய்ப் பேசாதீர்!"
என்ருேர் மறவர்குரல் என்செவியை முத்தமிட.
ஏறிட்டுப் பார்த்தேன் என்சொல்வேன்! அடடாவோ!
கீதத் தமிழுலகின் கேலிச்சித்தி ரம்போல
சேதுபதி நின்ருர் சிரித்து!

—கீதர்

நவம்பர் முதல் வாரம்!

முல்லை

இலக்கியத் திங்களிதழ்

ஆசிரியர் :-

கண்ணதாசன்

மூவர்ண ஆர்ட் முகப்பு!

டெம்மி அளவு

'கண்ணதாசன்' எழுதும் குறு நாவல்
20 பக்கங்கள்!

'கண்ணதாசன்' எழுதும் குறுங் காவியம்
'இதுவே போதும்!'

'கண்ணதாசன்' எழுதும் இலக்கிய விளக்கம்
முல்லைப்பாட்டு

க. அறிவழகன், எம். ஏ. எழுதும் ஆராய்ச்சிக் கட்டுரை
மனித சமுதாய வளர்ச்சி

— மற்றும் —

அறிஞர்கள் நகைச்சுவை (துணுக்குகள்)
சுவையான பத்திரிகைச் சாரம்

இதில்

இல்லாதன இல்லை!
இலக்கிய உலகின் எல்லை!
இது தமிழ்க்காவில் மலர் முல்லை!

குசராத்தி, வங்காளி, மராட்டி சிறுகதைகள்
இடம் பெறச் செய்யும் திட்டமும்
இருக்கிறது

விலை அணா 4 தான்!

— தென்றல் ஏசண்டுகள் 25-ந் தேதிக்குள் முன் பணம் அனுப்பி 'முல்லை' ஏசண்டாகவில்லையேல், மற்றவர்க்குத் தருப்படி, அவர்களே சொன்னதாகக் கருதப்படும்.

முல்லை :: சென்னை-6.

நாங்களும் நீங்களும்

ஏசண்(ட்)த் தோழரீர்!

ஒன்று நினைவிற்கொள்க!

என்றும், நீங்கள்தரும் பணத் தளவேதான் பத்திரிகை அனுப்பப் படும்; உங்கள் குணத்தளவே அல்ல! உங்கள் நாணயத்தில் எங்களுக்கு நம்பிக்கை உண்டு; ஆனால், அச்சடிக்கப்பட்ட நாணயங்களினல்தான் பத்திரிகை நடைபெறமுடியும் என்பதை தயைசெய்து, எங்களைப் போலவே தாங்களும் நினைவு கொள்வது நலம்!

ஒரு பிரதிக்கு எட்டணா முன் பணம். எத்தனை எட்டணாக்களை முன்பணமாக அனுப்புகிறீர்களோ, அத்தனை பிரதிகள் அலுங்காமல் குலுங்காமல் சிந்தாமல் சிதறாமல் தங்களுக்குக் கிடைக்கும். குறைந்த முன்பணம், கூடுதல் பிரதி - எதிர்பார்ப்பது நியாயமா?

"பத்துப் பிரதிகள் சேர்த்தனுப்புங்கள்" என்று எழுதும்போதே "ஐந்து ரூபாய் மணியார்டரில் வருகிறது" என்றும் - அனுப்பிவிட்டு - எழுதுங்கள்! அதைச் செய்யாமல் நீங்கள் வருந்தி எழுதும்போது, எங்களுக்கும் வருத்தமாகத்தான் இருக்கிறது. என்ன செய்ய? பத்திரிகை நிர்வாக விதி அப்படித் தானே இருக்கிறது!

★

உறுப்பினராகும் கல்லூரி மாணவர்களுக்கு ஆண்டுப் பணம் ரூ. 5 தான் எனக் குறிப்பிட்டிருந்தோம். எங்களுக்கில்லையா என நாகை, மதுரை, பெங்களூர் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் எழுதியுள்ளனர். மாணவர் உலகிற்கே ரூ. 5 தான் 'சந்தா' என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

★

'முல்லை'க்கும் 'தென்றல்'லுக்கும் சேர்த்து எழுதாதீர்கள் - அனுப்பாதீர்கள்! நிர்வாகி, 'முல்லை' என்றும், நிர்வாகி, 'தென்றல்' என்றும் எழுதுங்கள்; அனுப்புங்கள்,

★

இது, சென்ற இதழ் 'கோழை' கட்டுரை பற்றி வந்த ஒரு கடிதம்.

அன்புடையீர்!

சென்ற இதழ் தென்றலைக் கண்டு நானும், என் நண்பர்களும் சிந்தையெலாம் மகிழ்ந்தோம். மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட தென்றல் 'ஆரம்பத்திலேயே ஒரு நல்ல காரியத்தை செய்துவிட்டது.

என் நண்பர் ஒருவர், இளைஞர், உறவினர்களின எதிர்ப்புக்கிடையே காதல் மணம் செய்து கொண்டவர். எதிர்ப்பால் துவண்டுவிட இருந்தார் நாங்கள் போதிய அளவு உதவியும், ஊக்கமும் தந்து வந்த போதிலும் சென்ற இதழில் வந்த 'கோழை' என்னும் கட்டுரையே அவர் செய்ய இருந்த தவருன செயலில் இருந்து- செயற்கை மரணத்திலிருந்து அவரைத் தடுத்தது என்று மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மனிதன் துணிவுடன் உலகில் உள்ள எல்லா பிரச்சினைகளையும் சிந்திக்க வேண்டும், இந்தக் கருத்தை 'கோழை'யில் விளக்கமுற தீட்டியவருக்கு என் மனமார்ந்த நன்றி.

தென்றல் தொண்டு தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதே என் ஆவல்.

தங்கள் அன்புள்ள,
கா. அ. இரகுநாதன்.

சென்னை
13—10—'56.

தித்திக்குஞ் சேந்தமிழ!

கவிஞர் கண்ணதாசன்
அவர்களின்
கன்னித் தமிழ்க் காப்பியம்

★ மாங்கனி ★

விலை ரூபாய் இரண்டு.

கவிஞர் - துரைமாணிக்கம்
அவர்களின்
இனிக்கும் செந்தமிழ்க் காப்பியம்

கொய்யாக் கனி

விலை ரூபாய் 2—4—0.

அருணா பப்ளிகேஷன்ஸ்
தியாகராய நகரம், சென்னை-17

குறிப்பு :—'தென்றல்' வாசகர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் தனிச் சலுகைகள் உண்டு.

தொடர்ந்து படிக்கின்றீர்களா?
தி. மு க. தொண்டர்களின்
துணைவர்

அண்ணா

ஆசிரியர் :
வெற்றிவீரன்

ஞாயறு தோறும் வெளிவரும்
வார இதழ்

விலை 1 அணா

ஆண்டு சந்தா மூன்று ரூபாய்

இதழ் ஒன்றுக்கு நான்கு அணா
முன் பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் தேவை

— விவரங்களுக்கு —
நிர்வாகி, "அண்ணா"
5, அரங்கநாதபுரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை-4.

பாண்டிமாதேவி

★ கண்ணதாசன் ★

காலையில் விழித்த சேரக்
காளைகள், "தலைவ னின்றி
வேலெடுத் தென்னும்?" என்றே
விழித்தனர்; விழித்த கண்கள்
மேலுடைப் பெடுத்தாற் போல
வீழ்ந்தது கண்ணீர்! தோளில்
நூலெடுத் தவன்சொல் லாலே
நோய்மிகுத் தயர்ந்தார் சேரர்.

களத்திடை மீண்டும் வந்து
கைத்தின வெடுத்த பாண்டிக்
குலத்தினர் வஞ்சித் தானை
குழம்பிய தறியா நின்றார்.
வளத்தொடு கதிரோன் உச்சி
வானிடைத் தவழும் போதே
உளத்திடை ஐயம் தோன்றி
ஓய்ந்தவா றமர்ந்தார் மண்ணில்!

- வேறு -

வெய்ய செங்கதிர் மேற்றிசை வீழ்ந்தவப் போதில்
கையில் வெண்கொடி கொண்டொரு சேரலன் காளை
'ஐய சர'ணென அழுதகண் ணீரொடும் வீழ்வன்;
வையை மீனவன் மார்புறத் தழுவுவன்; மகிழ்வன்!

"உற்ற தென்ன?" வென்றனன்; ஓய்ந்தவன், "ஐய!
கொற்ற வர்க்கிரா வுற்றதென் றேவென அறியோம்!
செற்ற முற்றுச் சென்றன ரோவெமை நீங்கி
அற்றொ டர்ந்து போயினர்;, இவ்வரை மீளார்!"

தென்மொ ழிக்குத் தேனருள் தந்தவம் மீனன்
இம்மொ ழிக்கும் இளகினன்; காளையை விளித்து,
"தம்வ ழிக்குச் சேரலன் தப்பினன்; வீணர்
புன்மொ ழிக்குப் பொருந்தினன்; ஆதலின் இன்று

தங்க லர்முன் தோல்வியிற் றலைகுனிப் புற்று
எங்கெ னப்பிறர் கண்டுகொ ளாவணம் சென்றான்
தங்க வஞ்சித் தம்பிருந் தானையும் நீயும்
இங்கி ருந்து செல்க! நும் வஞ்சியின் மீது

பற்றெ மக்கே உண்டெனி னும்அதைப் பற்றும்
பற்றெ மைஅணு வளவுமே பற்றிய தில்லை!
குற்றமென்ன நீருணர்ந் தாலது போதும்!
மற்ற வற்றை நான்சொல வேண்டுமோ!" வென்றான்.

வில்ல வன்தன் தானையன் வெண்கொடி கொண்டோன்
நல்ல வன்சொல் நலமுறச் செவியிடை ஏற்று
செல்ல வங்கு நின்றவம் மீன்கொடிச் சுற்றம்
"வெல்க!" வென்று பாடிய படிசெலும் கூடல்!

ஞ்சியில்

வஞ்சி வந்த படையிடைக் கோதையின் வண்டோள்
துஞ்சு மென்று தோகையள் சேரமா தேவி
அஞ்சு கின்ற அடிபெயர்த் தன்னமென் நடையிற்
கெஞ்சு கின்ற இடையொடும் வந்தனள்; கீழே!

நாற்ப டைகள் நடந்தவென் றுலுமந் நடையில்
ஏற்பு டைத்த வேற்றமும் பெற்றியு மிலதால்
காற்பி ணைத்த கிண்கிணி நூபுரங் கலங்க
வேற்ப டைத்த விழியினள் வாடினள்; மிகவே!

மதிமு கத்து வியர்வுற வழிந்தவள் கழுத்து
நதிமு கத்து நடந்திட நங்கையின் மார்புப்
பதியி டைத்த சிறுவெளிப் பாய்ந்ததென் றுலச்
சதிப டைத்த துயரினைச் சாற்றினில் தரமோ?

மெல்ல வந்த நல்லமைச் சன்உறு செய்தி
சொல்ல வந்து "அன்னை!" என் றான்துயர்ச் சுதியே
கொல்லு மாறு மோதிடுங் கோதையின் செவியில்
வில்லி ருந்து விழிக்கணை நழுவிடக் குனிந்தாள்!

அன்னை கொண்ட ஆற்றவொ ணாத்துயர் கண்டு
என்னை சொல்வன் ஏகினன் கோதையர் அமைச்சு
மின்னை யொத்த மெல்லிடை வாடிட நங்கை
தன்னை யாற்றத் தானிரண் டல்லவென் றயர்ந்தாள்!

கூடல் மாடத்தில்......

- வேறு -

"என்னத்தான் வருகின்றார்! பார டிபார்!
எழிலைத்தான் முன்மார்பில் பார டிபார்!
கண்ணைத்தான் சரியாகப் பார டிபார்!
கனியைத்தான் பார்க்கின்றார்! பார டிபார்!

முன்னைத்தார் அசைந்தாடல் பார டிபார்!
மூட்டுச்சேர் பரிமீதிற் பார டிபார்
மின்னைச்சேர் இடையாய்நீ! பார்க்க வேண்டாம்!
விழிமூடி அடிபோடி! எனக்கே அத்தான்!"

வருகின்றார் என்றவுடன் தோகை நாச்சி
வார்த்தைக்குள் முரண்பாட்டை அறியா ளாகி(ச்)
சொரிகின்றாள் பூப்போல! உணர்ச்சி மீறிச்
சுகமெல்லாம் தமிழாகத் தமிழி னுள்ள

சிறுசொல்லும் சுகமாக அருகில் நின்ற
தேருத இளம்பெண்ணைப் பார்த்துப் பார்த்து!
'தருவாரோ அவர்;பெற்ற நாளெ லாமும்
தளர்வாளோ இவள்;பங்கு தமிழும் கொள்ளும்!

அப்பாடா! அவள்நெஞ்சம் விம்மி விம்மி
அம்மியிடைக் குழவிபடும் பாடே கொள்ளும்!
கைப்பாடோ மன்னர்க்கு! இடையில் வீழ்ந்து
கரைகின்ற பெரும்பாடே இவள்இ டைக்கு!

மெய்ப்பாடோ இரவில்தான்; என்ற போதும்
மிகைப்பாட்டுச் சுகப்பாட்டில் அதுவும் தோன்றும்!
தைப்பாட்டுப் போற்பொங்கித் தடங்கண் ணாளைத்
தலைகாலும் புரியாமல் தவிக்க வைக்கும்!

தோழியினைத் தொடுகின்றாள்; அத்தான் தொட்டுத்
தோளணைத்த கதையெல்லாம் சொல்லு வாள்போல்
ஆழியெனப் படைகூட்டி வருவான் இன்னும்
அரைநொடியில் வருவான்என் றாலும் தோகை

கோழியெனச் சிறகுவிரித் தோடு கின்றாள்
குடத்தேனை விழிவழியே குடிப்பாள் போல
ஏழரைநாள் பொறுத்தாலும், பெண், மணாளன்
எதிர்ப்பட்டால் இப்படித்தான் குதிரை வேகம்!

(தொடரும்)

ஈழங்கொண்ட இராசாதிராசன்

பகையரசின் முழக்கம்கேட்டு சிங்களம் சினம் பெற்றுக் கொதித் தெழுந்தது. 'ஆழி சூழ் ஈழ மண்ணில் சோழப் படை!'—என்ற சேதி அறிந்து சிங்கள மன்னன் பராக்கிரமபாகு தசை முறுக்கித் தாணை கிளப்பி னன். "தன்னிகரற்ற ஈழத்து வேங்கையாம் தண்டநாயகன் தலையை மதுரைக் கோட்டை வாசலிலே கட்டி, கைகொட்டிச் சிரித்த காவிரிக்கரைப் புலிக் கொடி கடல் தாண்டி வந்து வெற்றி கொண்டு போவதா? மானக்கேடு! மானக்கேடு!" என்று அரண்மனை அதிரக் கர் ஜித்தான்.

ஈழத்து முரசு எதிரொலி கிளப்பியது. காலத்தால் அழி யாத எழில் பெற்ற சிங்களச் சீமை, சோழமன்னன் இராசாதி ராசனுல் கொலை செய்யப்பட்ட தண்டநாயகனின் பேரில் ஆணை கூறி செருகளம் நோக்கிச் செல லத் தொடங்கியது.

அரண்மனையின் உச்சித்தளத் தில் நின்று பராக்கிரம பாகு களத்துக் கோலத்தைக் கண் ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். சோழப் பெரும் படையின் தளகர்த்தர் களில் ஒருவனுக வந்திருக்கும் சீவல்லபன் களத்திலே ஓடி யாடிப் போர் புரிவது அவன் கண்களில் படாமலில்லை. "துரோகி! அனாதையாகக் கிடந் தவனை அருகினில் அழைத்து வந்து அறுசுவை உண்டி ஊட்டி, ஆணழகா, நீ போர்ப்பயிற்சி பெற்றுக்கொள் என்று தட்டிக் கொடுத்தேன். தறுதலை! இன்று எதிரிப் படைக்கு தலைமை தாங்கி என்னையே எதிர்க்க வந் திருக்கிறன்" என்று பல்லை நெறித்துக் கொண்டு வயிற் றெரிச்சலைக் கொட்டிக் கொண் டான் பராக்கிரம பாகு.

களத்தின் பேரிரைச்சல் காதைத் துளைத்தும், காசினியை மறந்து கொண்டிருக்கும் போர் வீரர்களின் கடைசிக்குரல் உள் ளத்தைக் குடைந்தும் பராக் கிரம பாகு முறுக்கி விடப்பட்ட இயந்திரம் போல, தளத்திலே நடந்துகொண்டே இருந்தான்.

போர் தொடங்கிப் பதினைந்து நாழிகைகளுக்குப் பிறகு ஈழப் படையின் முன்னேடி ஒருவன் வேகமாக ஓடிவந்தான். வேந் தன் பாகு, பதைபதைத்தான்.

"நம்பிக்கையில்லை பிரபு! நாம் வளர்த்த சீவல்லபரே நமது படையைப் படுசூரணமாக்கிவிட் டார் அரசே! ஈழத்து வீரம் ஈழத்தையே சாய்த்துவிட்டது." என்று கண்கலங்கிச் சொன்னன் ஓடிவந்த படைவீரன்.

சிலையாக நின்ற பராக்கிரம பாகு, திடீரென்று உணர்வு பெற்றவனைப் போல வேகமாக அரண்மனைக்குள் நடந்தான். மன்னன் போக்கை மற்றவர் களால் அறிய முடியவில்லை. நீதி யுள்ள தங்கள் காவலன் தகாத முடிவிற்கு வந்து விடுவாரோ என்று ஈழத்துப் பெருமக்கள் கவலைப்பட்டனர். அரண்மனை யில் அமைதி நிலவியது. கூண் டுக் கிளிகளும், புனுகுப் பூனை களும் கூட ஊமையாகக் கிடந் தன. பளிங்குத் தரையில் நடப் போரின் பாதம் படும் ஓசை மட் டும் கேட்டுக் கொண்டிருந்தது.

குயினியின் அந்தப்புரத்து மேன் மாடத்தில் வழக்கமாக ஏற்றி வைக்கப்படும் நில விளக்கை அன்று காணேம். பலகணிகளின் மெல்லிய திரைகள் அகற்றப்பட்டிருந்தன. அரசாங்க ஊழியர்களுக்கே இவைகள் புதிராகப் பட்டன.

★

நடுநிசி! அரண்மனை பொலி விழந்திருந்தது. கோட்டை வாசல் திறந்து கிடந்தது. ஈழத் துக் கொடி அகற்றப்பட்டது. வெற்றிகொண்ட சோழநாட்டு அமைச்சர் அம்மையப்பன் பல்லவ ராயனும், சீவல்லபனும் பெரும் படையுடன் சிங்கள அரண்மனை புகுந்தனர். "எடு விலங்கை! எங்கே பராக்கிரம பாகு?" என்று கேட்டுக் கொண்டே சோழ அமைச்சர் அந்தச் சுந்த ரக் கோட்டை முழுதும் தேடி னர். பல நாட்கள் படுத்த படுக் கையாகவே கிடந்தவனைப்போல செம்பட்டு ஆசனத்தில் சோர்ந்து, சாய்ந்து கிடந்தான் பராக்கிரம பாகு. வீரமும் விவே கமும் மின்னலிடும் வசந்த முகத் தோடு சீவல்லபன் பராக்கிரம பாகுவின் பக்கத்தில் போய் நின்றன். ஈழத்து வேந்தனின் இரு விழிகளும் தைத்து வைத்த 'தசை மலர்க'ள் போல அசையா திருந்தன.

"கை கொடுப்பதாக உறுதி யளித்தானே பாண்டிநாட்டுக் கோழை-குலசேகர பாண்டியன், எங்கே அவன் இப்போது?" என்று கிண்டல் தொனிக்கக் கேட்டார் பல்லவராயன்.

பராக்கிரம பாகு பதில் ஏதும் சொல்லவில்லை. கம்பீரம் கலந்த அமைதியில் கிரேக்க நாட்டு விரச் சிலைபோல் சாய்ந்தது சாய்ந்தபடி இருந்தான்.

அப்போது சோழப் படை வீரன் ஒருவன் சீவல்லபனின் காதருகில் வந்து ஏதோ சொன் னன். சீவல்லபனின் முகம் சுருங்கியது; விசனம் அவனை முற்றுகையிட்டு விட்டது.

"வல்லபரே, ஏதும் வாட்ட மூட்டும் சேதியோ?"

"வாட்ட மூட்டும் சேதி யென்ன! என் வாழ்வையே சூன்யமாக்கிவிடும் சேதி அமைச் சரே......குயினி ஓடிப் போய் விட்டாளாம்!"

"என்ன...எந்த ராசாங்கத் திலும் நடைபெற்றிராத சம்ப வம்! அந்தப்புரத்திலிருந்து இளவரசி மாயமாக மறைந்தாள்! பராக்கிரமரே...உமது பரிபால னத்தில் உமக்கு இரட்டை அவ மானம்!"

"அம்மையப்பரே வீரத்திற்கு மதிப்பளிப்பேன்; கௌரவிப் பேன்; பொன்னுடை போர்த்து வேன். ஆனல் துரோகத்தால் கோபுரத்தில் வாழ முனைபவனை ஒருபோதும் இந்தப் பராக்கிர மன் மதிக்கமாட்டான். அவன் வெற்றி, புகழ் செல்வாக்கு எல் லாம் எனக்குத் தூசு" என்று சொல்லிச் சீவல்லபன் பக்கம் திரும்பினன் பராக்கிரம பாகு.

சீவல்லபனின் முகம் கறுத் தது. பல்லைக் கடித்தான்.

"குயினியை நீ பார்க்க முடி யாது!...அவள் பாதுகாப்பான சுரங்கத்திற்குப் போய் விட் டாள். அதுவே எனக்கு வெற்றி. கோட்டையில் புலிக்கொடி பறந் தாலென்ன பூனைக்கொடி பறந் தாலென்ன."—பராக்கிரமன் சொல்லிமுடிப்பதற்குள் அம்மை யப்பர், பராக்கிரமனைப் பாது காத்துக் கொள்ளும்படி, பக்கத் தில் நின்ற சோழநாட்டுப் ப[...] வீரர்களிடம் ஜாடை காட்[...] விட்டுக் கிளம்பினர். சீவல்ல[...] னும் பின் தொடர்ந்தான்.

★

அம்மையப்பப் பல்லவராய[...] யும், சீவல்லபனையும் ஈழத்துக்[...] அனுப்பி வைத்துவிட்டு ஒவ் வொரு நாளும் ஓலையை எதி[...] பார்த்துக் கொண்டிருந்த இரா சாதிராசனைத் திடீரென்று தாக்[...] ஆரம்பித்தான் குலசேகர பாண் டியன். வெகுண்டான் சோழன். "நன்றி கொன்றவனே, திக்குத் தெரியாமற் தவித்தபோது தட் டிக் கொடுத்தவனையே எட்டி உதைக்க நினைக்கும் பேராசைக் காரா?" என்று முழக்கமிட்டு தனது சூராவளிப்படையை ஏவி னன் சோழன். இரண்டு நாட் களுக்குள் மதுரைக் கோட்டை யில் புலிக்கொடி யேற்றப்பட் டது. இந்த வெற்றியில் ஈழத் துக்குச் சென்ற படை என்ன ஆயிற்று என்பதையே அறிய மறந்தான் இராசாதிராசன்.

பல்லவராயரும் சீவல்லபனும் வெற்றியோடு திரும்பி வரும் செய்திகிடைத்தது சோழனுக்கு. மாவிலைத் தோரணங்கள் கட்டி, மங்கள ஒலிகள் முழக்கி வாகை சூடி வந்த தளபதிகளுக்கு வர வேற்பு நடத்தினன் ராசாதி ராசன். சீவல்லபனின் முகக் குறியை அறிந்த இராசாதி ராசன்,

"வல்லபரே உமது வெற்றிக் களிப்பில் கொஞ்சம் விசனம் கலந்திருப்பதாக அறிகிறேன். காரணம் தெரிவிக்கலாமா?"— என்று அன்போடு கேட்டான்.

"உயிருக் குயிரான குயினி யைக் காணவில்லை பேரரசே! அவள் தான்..."

"தெரியும் எனக்கு! கவலைப் படாதீர்! குலசேகரன் புத்திரி— பாண்டிய நாட்டுப் பூங்கொடி— அவளை உனக்காகச் சிறைப் பிடித்து வைத்திருக்கிறேன். குயினியைக் காட்டிலும் அழ குடையவளாக, அறிவுள்ளவ ளாக அவள் இருப்பாளென்று நினைக்கிறேன்; நீர் அவளை....."

"மன்னிக்கவேண்டும் மன்ன வரே, எண்ணி எண்ணி உரு கிய என் குயினியைத் தவிர வேறு எவளிடமும் என் மனம் நாடாது. அவள் என் இதயத் தில் சாகாத சித்திரமாகி விட் டாள்."

"வல்லபரே வாலிபத்தில் நானும் இப்படித்தான் பேசி னேன். கவியாகப் பாடினேன் காதலியைப் பற்றி". என்று இராசாதிராசன் சீவல்லபனைத் தேற்றிக் கொண்டிருக்கும்போது அந்தபுரத் தோழி ஓடிவந்து "இன்று காலையிலிருந்து பாண் டிய குமாரியைக் காணவில்லை" என்றள்.

[கருத்து: கண்ணதாசன்; எழுதியது: தென்னரசு.]

★ அடுத்த இதழில் ★

அக்டோபர் முதல், மாத ஏடாக வெளிவருகிறது

நவம்பர் இதழ் அக்டோபர் 25-ஆம் தேதியே எங்கும் கிடைக்கும்

தென்றல் திரை

20 பக்கங்கள் :: 4 அணு

டிசம்பர் முதல் மாதந்தோறும் 1-ஆம் தேதியில் வெளிவரும்

அறிஞர் அண்ணு அவர்களின் சிறப்புக் கட்டுரை விரைவில் வெளிவரும். ஏஜண்ட் இல்லாத ஊர்களுக்கு முன்பணத்துடன் விண்ணப்பிக்கவும்.

தென்றல் திரை,
34, சர் தியாகராய ரோட்,
தி. நகர், :: சென்னை-17.

P. P. பத்மநாபன்,
உரிமையாளர், & நிர்வாகி.

முன்னாள் தீவிர கம்யூனிஸ்ட் படுதாக்குத் தாக்குகிறார்!

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

மன்னிக்க முடியாத பல தவறுகளை கம்யூனிஸ்ட் கட்சிகள் செய்கின்றன; காலத்திற்கும், நிலைமைக்கும் புறம்பான பல முடிவுகளை மேற்கொள்ளுகின்றன. ஒரு காலத்தில் ஒரு நாட்டிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொண்ட முடிவு தவறு என்பதை மாஸ்கோ அது தவறு என்று சொன்ன பிறகுதான் அந்த கம்யூனிஸ்ட் கட்சிக்கு "ஞானோதயம்" பிறக்கிறது. உடனே தவறைத் திருத்தும் படலம் ஆரம்பமாய் விடும். இந்தத் "திருப்பணிக்காக" ஒரு சிலர் பலியும் கொடுக்கப்படுவார்கள்! நேற்று மத்தியக் கமிட்டி அங்கத்தினராக இருந்தவர் இன்று தொழிற்சாலை வாசலில் நிற்கும் தொண்டராக மாறுவதும், இன்று தொழிற்சாலை வாசலில் நிற்கும் தொண்டர் மாகாணக் கமிட்டி அங்கத்தினராக மாறுவதும் (இது அபூர்வமாகத்தான் நடக்கும் என்றாலும்) இந்த வழியிலே நடக்கும் வாண வேடிக்கைகள்! ஆனால், முன்னர் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் ஏன் தவறு என்பதையோ, அந்தத் தவறுகள் ஏற்படக் காரணமென்ன என்பதையோ, புதிதாக மேற்கொள்ளும் முடிவு காலத்திற்குப் பொருத்தமானதுதானா என்பதையோ பரிசீலனை செய்யும் வேலையில் கம்யூனிஸ்ட் கட்சிகள் நேரத்தை வீணாக்குவதில்லை! ஏன்? மாஸ்கோ காட்டும் பாதை தவறாக இருக்க முடியாதல்லவா? இந்தப் போக்கு பல இமாலயத் தவறுகளுக்கு இடமளித்தது என்பதற்குச் சரித்திரம் சாட்சி!

இந்தப் போக்கிலே ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? மாஸ்கோ காட்டும் பாதை மாத்திரம் தான் சரியான பாதை என்னும் மூட நம்பிக்கை கைவிடப்பட்டு விட்டதா? சோவியத் யூனியனுடைய வெளிநாட்டுக் கொள்கையிலே ஏற்படும் மாற்றத்திற்குத் தகுந்தவாறு தத்தம் நாட்டுக் கொள்கைகளை வகுக்கும் முறைக்கு கம்யூனிஸ்ட் கட்சிகள் முழுக்குப் போட்டு விட்டனவா? பல்வேறு வடிவங்களில் பல்வேறு நாடுகளில் இயங்கும் தனி மனிதன் ஆராதனைத் தத்துவத்திற்கு விடை கொடுக்கப்பட்டு விட்டதா? கட்சியின் பெயரிலே செய்யப்படும் மனித தர்மத்திற்கு முற்றிலும் முரணான அருவருக்கத்தக்க காரியங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு விட்டதா? குருஷெவ் அறிக்கையைப் படித்த ஒருவர் மனதிலே எழும் நியாயமான கேள்விகள் இவை. இந்தக் கேள்விகளுக்குக் காலம் தான் பதில் சொல்லவேண்டும்.

★

குருஷெவ் அறிக்கை கீழ்க்கண்ட பிரச்சினைகளை எழுப்புகின்றன:

1. ஸ்டாலின் மன்னிக்க முடியாத தவறுகள் செய்தார் என்றால், இந்த மன்னிக்க முடியாத தவறுகளைச் சுமார் இருபது வருடங்கள் அவர் எவ்வாறு தொடர்ந்து செய்ய முடிந்தது?

2. நேர்மையான கம்யூனிஸ்டுகளையும், நிரபராதிகளையும் இரக்கமின்றிச் சித்திரவதை செய்து அவர்களிடமிருந்து பலாத்காரமாக "ஒப்புதல் வாக்குமூலங்கள்" வாங்கப்பட்டது என்றால், புரட்சிகர நீதி அந்தக் காலத்தில் செத்துக் கிடந்ததா?

3. பொலிட்பீரோ அங்கத்தினர்களையும், கன்ட்ரோல் கமிஷன் தலைவரையும் எந்தவிதமான விசாரணையுமின்றி ஸ்டாலின் அழித்தார் என்றால், இந்தப் படுகொலைக்கு இடமளித்த சோஷலிஸ்ட் நீதி உண்மையில் சோஷலிஸ்ட் நீதிதானா?

4. டிட்டோ, ஸ்லான்ஸ்கி, ராஜக், வோஸ்னெஸென்ஸ்கி, குஸ்னெட்ஸோவ் போன்ற தலைசிறந்த கம்யூனிஸ்டுகளை "துரோகிகள்" என்று ஸ்டாலின் திருவாய்மலர்ந் தருளியதும், உலகிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் அத்தனையும் இவர்களை "துரோகிகள்" என்று பழித்ததும், கம்யூனிஸ்ட் கட்சிகளின் போக்கில் ஏதோ கோளாறு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டவில்லையா?



5. உள்கட்சி ஜனநாயகம், தோழமை உணர்ச்சி, ஏகக் குடும்ப மனப்பான்மை என்பன போன்ற கோட்பாடுகள் உண்மையில் ஏட்டுச் சுரக்காய் என்பதை உலக கம்யூனிஸ்ட் கட்சிகளின் கடந்த இருபது வருட சரித்திரம் நிரூபிக்க வில்லையா?

6. மாஸ்கோ தவறு செய்ய முடியாது என்றும், மாஸ்கோ காட்டும் வழியை பயபக்தியுடன் பின்பற்ற வேண்டும் என்றும், மாஸ்கோ தான் தொழிலாளி வர்க்கத்தின் 'வத்திகான்' என்றும் இதுவரையில் கூறிவந்தது தவறு என்பதை குருஷெவ் அறிக்கை எடுத்துக் காட்டவில்லையா?

7. அதிகாரத்வ மனப்பான்மையும், சர்வாதிகாரப் போக்கும், கேந்திர ஸ்தானத்தில் இருப்பவருக்குப் பாத சேவை செய்யும் அவல நிலையும் கம்யூனிஸ்ட் கட்சிகளில் வேரூன்றி இருக்கின்றன என்பதை குருஷெவ் அறிக்கை சுட்டிக் காட்டவில்லையா?

இவ்வளவு மகத்தான பிரச்சினைகளைத் தைரியத்துடன் எழுப்பிய குருஷெவை நாம் பாராட்டுகிறோம். தனி மனிதன் ஆராதனைத் தத்துவம் எவ்வளவு பயங்கரமான விளைவுகளுக்கு இடமளிக்கும் என்பதற்கு ஆதாரமாக ஸ்டாலின் புரிந்த கொடுமைகளை அவர் அம்பலப்படுத்தி இருக்கிறார். யந்திர ரீதியாக அவர் கொடுத்த தகவல்களை அங்கிகரிக்காமல், அவர் கொடுத்த தகவல்களுக்குப் பின்னே பொதிந்து கிடக்கும் உண்மைகளைக் காய்தல் உவத்தலின்றி அனைவரும் பரிசீலனை செய்யவேண்டும். இது ஸ்டாலின் சம்பந்தப்பட்ட பிரச்சினை மாத்திரமல்ல கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபன அமைப்பு. சோவியத் சர்க்கார் அமைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினையும்கூட. சோவியத் சர்க்கார் அமைப்பில், கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பில் கோளாறு இருக்கிறது என்பதும், இந்தக் கோளாறு தான் ஸ்டாலின் கொடுங்கோன்மைக்குக் காரணம் என்பதும் தெளிவானால், இந்தக் கோளாறைத் திருத்த சகல நடவடிக்கைகளும் எடுத்துத்தான் தீரவேண்டும். மார்க்ஸிஸம்-லெனினிஸம் வளர இது விலக்க முடியாதது.

மாஸ்கோ கூறும் யோசனைகளை எழுத்துத் தவறாமல் பின்பற்றுவது விரும்பத்தக்கதுதானா என்னும் கேள்வியை இத்தாலிய கம்யூனிஸ்ட் தலைவர் தோக்ளியாட்டியும், ஐக்கிய அமெரிக்க கம்யூனிஸ்ட் தலைவர் டென்னிசும் எழுப்பி இருக்கின்றனர். கடந்த காலத்திலே ஸ்டாலின் காட்டியவழி கல்லும் முள்ளும் நிறைந்த காட்டுப் பாதை என்பதை குருஷெவ் ஒப்புக்கொண்ட பிறகு, சிந்திக்கும் துணிவு படைத்த கம்யூனிஸ்டுகள் சிந்திக்க ஆரம்பித்திருக்கின்றனர். கடந்த காலத் தவறுகளை குருஷெவ் அங்கீகரித்த பிறகு, இவ்வளவு தவறுகளுக்கு இடமளித்த சோவியத் முறைகளை மற்ற நாடுகள் பின்பற்றுவது புத்திசாலித்தனம்தானா? என்னும் கேள்வியை விஷயம் தெரிந்தவர்கள் கேட்க ஆரம்பித்திருக்கின்றனர். இந்தப் போக்கு பெரிதும் வரவேற்கத் தக்கது. இந்தப் போக்கு வளர வேண்டும்—விரிவுபட வேண்டும். மார்க்ஸிஸம்—லெனினிஸம் வளர இது ஒன்றுதான் வழி.

குருஷெவ் மதகைத் திறந்து விட்டார். கடந்த காலத்தில் புனிதமானவை என்று கருதப்பட்டவை உண்மையில் மாசுபடிந்தவை என்பதை அவர் விளக்கியிருக்கிறார். ஸ்டாலின் சிருஷ்டி செய்த அதிகாரத்து அடக்குமுறை என்னும் இரும்புப் பிடியை அவர் ஓரளவு தளர்த்தி யிருக்கிறார். இந்த நடவடிக்கைகளை நாம் கொட்டு மேளத்துடன் வரவேற்கிறோம். ஸ்டாலின் செய்த தவறுகளைச் சுட்டிக் காட்டுவதுடன் நின்று விடாது, தவறுகள் செய்ய ஸ்டாலினை அனுமதித்த சக்திகளையும், முறைகளையும் நிர்மூலம் செய்ய குருஷெவ் நடவடிக்கைகள் எடுத்தால்தான் அவர் ஆரம்பித்த நல்ல வேலை பலனளிக்கும்.

குருஷெவ் அறிக்கையை மார்க்ஸிஸம்-லெனினிஸத்திலே அசையாத நம்பிக்கை படைத்த அனைவரும் ஊன்றிப் படிப்பார்களாக. குருஷெவ் அறிக்கையின் பலனாக எழுந்திருக்கும் புதிய சூழ்நிலையை மாசற்ற உள்ளம் படைத்த கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்கள் நுணுக்கமாகப் பரிசீலனை செய்வார்களாக. தம்மைச் சுற்றித் தாமே கோடுகள் கிழித்துக் கொண்டு அந்தக் கோடுகளிலிருந்து வெளியே வர மறுக்கும் முறைக்கு விடை கொடுத்துவிட்டு, அஞ்சா நெஞ்சம் படைத்த கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்கள் துணிந்து சிந்திப்பார்களாக. நோக்கம் நிறைவேறுவதற்காக எத்தகைய தியாகம் செய்யவும் தயங்காத கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்கள், தங்கள் சொந்த அனுபவத்தின் அடிப்படையில் குருஷெவ் அறிக்கையை ஆராய்வார்களாக. ஸ்டாலின் காலத்திலே சோவியத் யூனியனில் மாத்திரமல்ல, பிற நாடுகளிலும் எண்ணற்ற மாசு மறுவற்ற கம்யூனிஸ்டுகளுக்கு "துரோகிகள்" என்னும் பட்டம் சூட்டப்பட்டது சரிதானா என்பதைச் சிந்திப்பார்களாக.

குருஷெவ் பந்தை உருட்டி விட்டார்; நம்பிக்கை என்னும் பாறாங்கல்லை உடைத்துவிட்டார். இது புதிய போக்கின் ஆரம்பத்தைத் தான் குறிக்கிறது. இது பெரிதும் வரவேற்கத்தக்க போக்கு; இந்தப் போக்கு வளர்ந்து விரியவேண்டும். இத்தப் பணியை குருஷெவும், அவர் தோழர்களும் எவ்வாறு பூர்த்தி செய்யப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். ★

குற்றமும் தண்டனையும்

— 11-ம் பக்கத் தொடர்ச்சி —

இயலாதென்று நினைக்கிறீர்களா? முக்கியமாக இன்னொன்றைச் சொல்ல மறந்துவிட்டேன். பாலங்கட்டப் போதுமான பணம் பொக்கிஷத்தில் இல்லை!''

''அப்படியானால்?''

''பாலம் அமைக்கும் எண்ணத்தை விட்டுவிடுங்கள்!''

''பகைவர்கள் உள் நுழையாமல் இருபுறமும் பாலத்தைக் காக்க நமது வீரர்கள் தோள் வலிமை மிக்கவர்கள்! இந்த அகிலமே திரண்டு வந்தாலும் தளராமல் போரிடும் வன்மை வாய்ந்தவர்கள் நமது வீரர்கள்! அமைச்சரே! இதையெல்லாம் அறிந்திருந்தும் பாலமமைக்கும் முயற்சியைத் தாங்கள் கைவிடும் படியாகக் கூறுகின்றீர்கள்! பொக்கிஷத்தில் பணமில்லையென்கிறீர்கள். குடிமக்கள்கொற்றவன் பால் கொண்டிருக்கும் அன்பைத் தாங்கள் நன்றாக அறிவீர்கள். ஆகவே கிழியில் பணமில்லாததால் பாலம் கட்ட முடியாமல் போய்விடாது. வயதில் பெரியவரான உமக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, தற்காலிகமாகப் பாலம் கட்டும் எண்ணத்தைக் கைவிடுகிறேன். பதினாயிரம் வெள்ளி கொடுத்து, தக்க மரியாதையுடன் டா அவிலாந்தை அனுப்பிவிடுங்கள்!''

''அரசே! டா அவிலாந்தை வெளியே அனுப்பினால், ஆங்கிலக் கம்பெனியார் இரகசிய மறிவார்கள். எவ்வளவு சீக்கிரமாகத் தங்களைக் கவிழ்க்க முடியுமோ அவ்வளவு விரைவில் செயலாற்றத் துணிவார்கள். அவிலாந்தை வெளியில் அனுப்பக் கூடாது!''

''சிறையில் அடைப்பதா?''

''அதுவும் கூடாது''

''அப்படியானால்?......அமைச்சரே! அவிலாந்தை என்ன செய்ய வேண்டுமென்கிறீர்கள்?''

'வேறு வழியில்லை அரசே!... அதுதான்.....ஆம்! அதுதான் வழி.''

சிந்தனைக்கும் எட்டாத சூனிய வெளியில் திப்புவின் மனம் உழன்று கொண்டிருந்தது!

3

'நீண்ட நேரம் காக்கவைத்து விட்டேனா? மன்னிக்க வேண்டும்!'' என்று கூறியவண்ணம் பற்களத்தனையும் தெரிய இளித்தது, அப்போதுதான் அங்கு வந்த உருவம்.

''பரவாயில்லை போனகாரியம் என்னவாயிற்று? நல்ல செய்தி தானே சொல்லப் போகிறீர்கள்?'' என்று கேட்டது, முதலில் பேசிய உருவத்தின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்த உருவம்.

வஞ்சகமும் துரோகமும் நிறைந்த அந்த இரண்டு மனித உருவங்களின் உள்ளங்களைப் போலவே, அந்தப் பிரதேசமும், நிலவின் ஒளி படாமல் அடர்ந்த மரங்களால் இருள் சூழப் பெற்றிருந்தது!

''சற்றுச் சிரமமாகத் தான் இருந்தது. ஆனால்...''

''சரி, முடிவாக திப்பு என்ன சொல்கிறான்?''

''சொல்வதென்ன? பிரெஞ்சு இஞ்சினியர் டா அவிலாந்த், நாளை விடிவதற்கு முன்பு...''

'சபாஷ் பூர்ணையா!'' பூர்ணையாவின் இரண்டு கைகளையும் ஆனந்தத்தோடு குலுக்கினார் வெல்லெஸ்லி!

''நாளை காலை, இரானித் திட்டின் மீது இரத்தம் தோய்ந்து கிடக்கும்! திப்புவின் சேனாதிபதி மீர் சாடக்கினால், டா அவிலாந்த் சுட்டுக் கொல்லப்படுவான்!'' என்று கூறி இடியிடி யென்று சிரித்தார் பூர்ணையா.

''பூர்ணையா! கைம்மாறாக எம்மிடம் நீங்கள் எதையும் எதிர்பார்க்கலாம்!'' என்றார் பூர்ணையாவைப் பார்த்து, வெல்லெஸ்லி.

'அரசனாக இருந்து அதனால் கிடைக்கும் வாழ்வு வானவில்லைப் போன்றது! அமைச்சர் பதவியே போதும் எனக்கு!'' என்று கூறிப் புன்னகை புரிந்தார் பூர்ணையா.

4

திப்பு படுக்கையில் புரண்டு படுத்தார். ஓயாத சிந்தனையால் அவர் தலை வலித்தது. உறக்கமின்மையால் கண்கள் சிவந்திருந்தன. முகம் வெளுத்துப் போயிருந்தது. நேரம் கழிந்து கொண்டேயிருந்தது''

'டுமீல்! டுமீல்!

''அது என்ன சப்தம் சர்தார்!'' என்று அலறிக் கொண்டே படுக்கையை விட்டுத் துள்ளி எழுந்தார் திப்பு.

அறிந்துவர சர்தார் ஓடினான். திப்பு அவன் பின்னால் தள்ளாடி நடந்து சென்றார்! மூச்சு வாங்க எதிரில் வந்தவனைப் பார்த்து, ''என்ன மோகன்சிங்?'' என்றார்.

''முடிந்து விட்டது!'' என்றான் மோகன்சிங். திப்புவைக் கீழே சாயாமல் அவன் தாங்கிக் கொண்டான். திப்புவின் கைக் குறிப்பை யறிந்து இரானித் திட்டிற்கு அவரை அழைத்துச் சென்றான்.

நெஞ்சிலிருந்து இரத்தம் கொட்ட, மல்லாந்து விழுந்து கிடந்தான் டா அவிலாந்த்! அவனது வாய், ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது! அருகில் காது வைத்துக் கேட்டார் திப்பு.

''துரோகம்! துரோகம்!'' என்று இருமுறை சொல்லி ஓய்ந்தது அந்தக் கலைஞனின் வாய்.

நம்பிக்கைத் துரோகமும் நயவஞ்சகமும் நிறைந்த இந்தப் பாழுலக வாழ்வை நீத்தான் அந்தப் புனித மனம் படைத்தவன்.

''மீர் சாடக்! நீ சுடுவதற்கு முன் இவர் ஏதாவது கூறினாரா''; ''என்னைச் சுடுவதற்கு முன்பு ஒருமுறை நான் அரசரைக் காண அனுமதியுங்கள்'— என்று கேட்டார் அரசே! அமைச்சர் அனுமதிக்க வேண்டாமென்று கூறியிருந்தார். நான் மறுத்ததும், 'வாழ்க நெப்போலியன்! வாழ்க திப்பு மன்னர்!' என்று கூறிவிட்டு, சுடும்படியாக மார்பைக் காட்டிப் புன்னகையுடன் நின்றார்!''

திப்பு கதறிக் கதறி அழுதார். அவர் கன்னத்திலிருந்து வழிந்த கண்ணீர், பிணத்தின் மீது தோய்ந்திருந்த இரத்தத்தின் மீது முத்து முத்தாக விழுந்தது!

வெண்பாப் போட்டி

— 12-ம் பக்கத் தொடர்ச்சி —

காலையிலிருந்து கதறினேன்; அந்தியில்தான் கிடைத்தது. அதுவும் ஒரு பிடியரிசி! அதையும் தான் உண்ணவோ, தன் மனைவிக்கு ஊட்டவோ விழைந்தானில்லை. சேய்களுக் கென்றே செப்புகிறேன். அவனை 'ஓடிப் போய்க் கொண்டுவா!'' என்கிறான். எதை! விறகையா? விறகு அவர்களுக்கு ஏது? காய் சருகைக் கொண்டுவரச் சொல்கிறான்!-வறுமையின் கொடுமை; பாசத்தின் துடிப்பு—வெண்பாவில் பொங்கி வழிகிறது.

இன்னொரு வெண்பா:

''பூக்காமற் போகுமோ பூ'' என்ற ஈற்றடிக்கு வந்தது அது. அது இது.

பெற்றிருக்கும் செல்வம் பிறர்க்குக்
கொடுப்பதனால்
வற்றுமென வள்ளல் வழங்
காரோ!—பொற்றொடியே
ஈக்களெலாம் தேனை எடுத்தேகும்
என்றஞ்சிப்
பூக்காமற் போகுமோ பூ!

—வாரிக் கொடுத்தால் வற்றி விடுமே என்று, வள்ளல், தன் செல்வத்தை வழங்காமலா இருக்கிறான்? அதுபோல், ஈக்களெல்லாம் தேனை எடுத்துச் சென்றுவிடுமே என்றஞ்சி பூக்கள் பூக்காமலா போகின்றன?''-பூக்களுக்கு வள்ளண்மை கற்பிக்கிறான் கவி, இந்த வெண்பாவில். நல்ல கற்பனை. இதனை எழுதியவர் செங்கல்பட்டு கே. சீனிவாசன்.

அடுத்தொன்று:

வையம் இகழ்ந்தாலும் வால்
பிடிப்போர் தம் தொழிலை
செய்ய மறப்பதுண்டோ சேல்
விழியே!—மொய்குழலார்
நோக்காமற் போனாலும்
நோகாத கற்றுழை
பூக்காமற் போகுமோ பூ!

—''உலகம் என்னதான் இகழ்ந்து பேசினாலும் பிறரது வால்பிடித்து வாழ்பவர்கள் தங்கள் தொழிலைச் செய்யாமல் போய் விடுகிறார்களா? அதுபோல, மொய்குழல் தோகையர் பார்க்காமலேயே போனாலும், பயனற்ற கற்றுழை, பூப் பூக்காமலா போய்விடுகிறது?''-அண்டி அண்டிப் பேசிட்டு வால் பிடித்து வாழ்பவருக்குக் கற்றுழைப் பூவை உவமிக்கிறான் கவி. இது காரைக்குடி நாவுக்கரசன் வெண்பாவாகும்.

மற்றொன்று:

அல்லுண்ட கூந்தல் அழகே!
தழுவுகையில்
புல்லேன் எனநீ புலந்தாலும்—
கொல்விழியால்
நோக்காமல் ஊடினும் நோகி
லேன், காலத்தே
பூக்காமற் போகுமோ பூ!

—''இரவின் கருமையை அள்ளி உண்ட கூந்தலைக் கொண்ட அழகு மங்கையே! நான் தழுவு கையில்; தழுவமாட்டேன் என்று நீ வெறுத்தாலும், நான் வருந்த மாட்டேன். காலம் வந்தால் மலர், மலராமலா போய் விடும்?'' ஊடலை மொட்டாக்கி, உவகையை மலராக்கி, காலத்தை இசைவாக்கி, கற்பனையைச் சிந்தவிடுகிறான் கவி. எப்படியும் நீ என்னை நோக்கி, நெகிழ்ந்து, இணங்கித்தானே ஆகவேண்டும் என்ற கம்பீரமான 'ஆண்மைக் கேள்வி' இதில் அடக்கம். இது, கோவை 'வில்லவன் கோதை' வரைந்ததாகும்.

''பூவைமே லெத்தனை பூ'' என்ற ஈற்றடிக்கு வந்த ஒரு வெண்பா என் இதயத்தைத் தொட்டது.

சமுதாயத்தின் கட்டுப்பாட்டினால், நசுங்கிப்போன கைம்பெண் ஒருத்தி. அவளை, 'விதவை' எனத் தூற்றி, எண்ணெய் தடவ விடாது, பூச்சூட விடாது, குறைபட்ட சித்திரமாகக் காட்சி தர வைத்தது சமுதாயம். ஊரிலே பெண்கள், ஆசையோடு மலர் வாங்கிச் சூடும்போதெல்லாம், அவள் நெஞ்சம் நைந்து வருந்தும். ''நாமும் பூச்சூட முடியவில்லையே'' என எண்ணி எண்ணி நல்லாள் நலிந்தபடியே மெலிந்தாள்—பின் இறந்தாள்! வாழ்விலே அவள் கொண்டிருந்த ஆசைகளை—மலர் சூடும் எண்ணத்தை — அடக்கிக் கொண்டிருந்த குருட்டுச் சமுதாயம் எழுந்தது; அவள் பிணத்தின் மீது ஏராளமான மலர்களைச் சாத்தி அவளைத் தூக்கிச்சென்று எரித்தது! சமுதாயத்தின் மடத்தனத்தை இதற்குமேல் எப்படிச் சித்தரிக்க முடியும்? வாழுங் காலத்தில் வழியில்லை; செத்தபின் சிங்காரம்! அட நாசகார சமூகமே!

—இந்தக் கருத்துப்பட வந்த வெண்பா, இராங்கியம், எழில் வரைந்ததாகும்.

எண்ணெயிலை, ஏற்றபூச் சூடவகை
யேதுமிலை;
பெண்கூந்த லிந்நிலையிற் பேன்
பிடிக்க—மண்மீதில்
சாவை அவளண்டிச் சாய்ந்துவிட்
டாள்; பின்னந்தப்
பூவைமே லெத்தனை பூ!

—இப்படி ஏராளமான வெண்பாக்கள் சுவையுடன் தென்றலில் வந்துள்ளன. அவற்றில் தாங்கள் சுவைத்த ஒரு வெண்பாவை, விளக்கத்தோடு எழுதி, நண்பர்கள் தென்றலுக்கு அனுப்புவார்களாக!, தென்றலில் அரைப்பக்கத்திற்கு மேல் வரக்கூடாது. நல்ல விரிவுரைகள் இடம் பெறும். ★

சரித்திரக் கதை ... ...

குற்றமும் தண்டனையும்

முல்லைவழுதி

1

மெல்லென வீசிய இளங்காற்று 'தரியா தௌலத்'தின் அந்தப்புரப் பூங்காவில் இதழ் விரித்துச் சிரித்த மலர்களின் நறுமணத்தை நாற்புறமும் பரப்பிக் கொண்டிருந்தது. அழகு மிழும் அந்த மலர்வனம், பால் வண்ண முழுமதியின் தண்ணொளியால் அந்த நேரத்தில் இயற்கை யன்னையின் பூரணப் பொலிவையும் பெற்றிருந்தது.

'தரியா தௌலத்'!—ஆம்; சீரங்கப் பட்டணத்திலுள்ள திப்புவின் அரண்மனைக்குப் பெயர்.

கைகளைப் பின்புறம் கட்டிய வண்ணம் மன்னர் திப்பு, பூங்காவில் அப்படியும் இப்படியுமாக உலவிக்கொண் டிருந்தார். மலரின் மணமும் நிலவின் ஒளியும் அவர் இதயத்தினைத் தம் பால் ஈர்க்கவில்லை. சிறிதுநேரம் நின்ருர். புருவங்கள் மேலெழ, நெற்றியில் சுருக்கங்கள் விழ ஏதோ சிந்தித்தார். மீண்டும் முன்போல உலவ ஆரம்பித்தார். சிந்தனையின் பிரதிபலிப்பாக நீண்ட பெருமூச்சு அவருள்ளத்தை ஊடுருவிக் கொண்டு வெளி வந்தது.

தென்றலில் அசைந்தாடிய மலர்ச் செடிகள், தனது நிலை கண்டு தலையாட்டிச் சிரிப்பதைப் போல அவருக்குத் தோன்றியது. "அவர் உதவி கிடைக்குமா? ஆங்கிலேயரின் கொட்டம் அடங்குமா? ஐதர் வீற்றிருந்த சிங்காதனம், அவர் மகன் திப்புவுக்கே உரியதாகுமா?...... நெப்போலியன்!—ஆகா! அவர் உதவி எனக்குத் தவருமல் கிடைக்குமானல்......! நிச்சயம் கிடைக்கும். அவர் சொன்ன சொல் தவற மாட்டார். ஆங்கிலேயரைப் போல பாம்பின் நாக்கை உடையவரல்லர் நெப்போலியன். அவர் அன்பின் திருவுருவம்; ஆண்மையின் சிகரம்......"

"அரசே! தங்களைக் காண பிரெஞ்சு இஞ்சினியர் டா அவிலாந்த் வந்திருக்கிருர்!" என்ற குரல் கேட்டு திப்புவின் சிந்தனை சிதறுண்டது! மன்னனின் கட்டளைக்காகச் சேவகன் சர்தார் சிரம் தாழ்த்தி நின்றிருந்தான்!

"அவரை வரச்சொல் சர்தார்! அவரைக் காண நான் ஆவலுடன் இருப்பதாகச் சொல்!" உணர்ச்சியுடன் திப்புவின் வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தைகள், அவருள்ளத் துடிப்பின் வேகத்தை விளக்கின!

"வணக்கம் அரசே!"

"வாருங்கள் அவிலாந்த்! தங்களைக் காண நான் மிகவும் மகிழ்கிறேன். என் மனதில் சுழன்றடித்துக் கொண்டிருந்த சிந்தனைப் புயல், தங்கள் வருகையை அறிந்ததும் ஓய்ந்துவிட்டது!"

"அப்படியா அரசே!

"ஆம்! எத்தனையோ எண்ணங்கள்...ஒரே குழப்பம்! தங்களைக் கண்டதும் எல்லாம் ஓய்ந்துவிட்டன! காற்றில் மிதப்பதைப் போன்ற நிலையில் இருக்கிறேன் அவிலாந்த்!...நண்பரே! உமக்கு நான் முகமன் கூறுவதாக நினைக்க வேண்டாம்!"

"தங்கள் வெள்ளையுள்ளத்தை நான் அறியமாட்டேனு அரசே! மாவீரர் நெப்போலியனின் நட்பைப் பெற நரிக்குணம் கொண்டவர்களால் முடியாது. அவரது ஆழ்ந்த அன்பையும் அபிமானத்தையும் பெற்றிருக்கிறீரே—அது போதுமே தங்கள் பண்பறிய!"

"ஆமாம். என்மீது நெப்போலியன் குன்ருத பாசம் கொண்டிருப்பதால் தான் என் வேண்டுகோளுக் கிணங்கித் தங்களை அனுப்பினுர். அவிலாந்த்! மாதிரிப் பாலம் கட்டி முடித்துவிட்டீர்களா?"

"காலையில் தான் முடிந்தது அரசே. பார்வையிடத் தங்களை அழைத்துப் போகவே வந்தேன்."

பாலம் கட்டப்பட்ட இடத்திற்குத் திப்புவும் டா அவிலாந்த்தும் சென்றனர். பாலத்தைப் பற்றி இஞ்சினியர் டா அவிலாந்த் திப்புவுக்கு விளக்கினுன்:

"அரசே! ஒரு கண் உடைய இந்த மாதிரிப் பாலத்தின் நீளம் 112 அடி; அகலம் 3 அடி. இதன்மீது சிறுவன் நின்று குதித்தாலும் பாலத்தின் மத்தி இரண்டு அங்குலம் வில்போல் வளைந்து பழைய நிலை பெறும். படைவீரரனைவரும் நடந்தாலும் பாலம் நெக்கு விடாது!"

பாலத்தின் மீது திப்பு நடந்து பார்த்தார். 112 அடி நீளத்திற்கும் ஒரே கண் உடைய அந்தப் பாலம் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை! என்ன அற்புதமான படைப்பு!

"அவிலாந்த்! என் மகிழ்ச்சியை உள்ளபடியே விளக்கிக் கூற வார்த்தைகள் கிடைக்கவில்லை!"

"அந்த மகிழ்ச்சியில் எனக்கும் பங்குண்டா அரசே?" என்று சிரித்துக் கொண்டே அங்கே வந்தார், அமைச்சர் பூர்ணையா.

"வாருங்கள்! நல்ல சமயத்தில் வந்தீர்கள். என் மகிழ்ச்சியைத் தாங்கள் பகிர்ந்து கொள்ளாவிட்டால், அளவுக்கு மீறிய பூரிப்பால் ஒருவேளை என் இதயம் வெடித்துப் போய்விடக் கூடும்! பாருங்கள் பிரெஞ்சுக் கலைஞரின் அற்புதச் சாதனையை!" மகிழ்ச்சிப் பெருக்கில் வாய் குழறியபடி திப்பு பேசினுர்.

பூர்ணையா, மாதிரிப் பாலத்தைப் பார்வையிட்டார். அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

"அவிலாந்த்! தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். தாங்கள் இவ்வளவு பெரிய திறமைசாலி என்பதை முதலில் நான் நம்பவில்லை!"

"அதிகமாகப் பாராட்டுகிறீர்கள்!"

"இல்லை அவிலாந்த்! அமைச்சர் எப்போதும் உள்ளதையே கூறுவார்!"

"தங்கள் அன்பிற்குத் தலை வணங்குகிறேன்!"

"நாளை முதலே வேலையைத் தொடங்குகின்றீர்களா?"

"தங்கள் விழைவிற்கு மாற்றுரை ஏது அரசே!"

"ஆமாம்! திப்புவின் ஆண்மையையும் நெப்போலியனின் ஆற்றலையும் ஆங்கிலேயரும் பிறரும் அறியவேண்டும்! ஐதரின் மகன் திப்பு அடங்கிப் பதுங்கும் சிறு முயலல்ல. புலியின் வயிற்றில் பிறந்தவன் இந்தப் பூனைகளை யெல்லாம் கண்டு பயந் தொளியும் எலியாகமாட்டான்!-என்பதை எதிரிகள் உணர வேண்டும். அதற்காக விரைவில் பாலம் அமைத்தாக வேண்டும் அவிலாந்த்!"

"அரசே! தங்கள் எண்ணம் ஈடேற என்னையே நான் அர்ப்பணிக்கவும் தயாராக இருக்கிறேன்!" என்று கூறிவிட்டு, திப்புவிடமும் பூர்ணையாவிடமும் விடை பெற்றுச் சென்ருன், டா அவிலாந்த்!

2

பூர்ணையாவும் திப்புவும் அரண்மனையின் அந்தப்புரத்திற்கு வந்தனர்; மலர்மணம் தவழும் இளமரக் காவில் அமைக்கப்பட்டிருந்த ஓர் பளிங்கு மேடையில் அமர்ந்தனர். திப்புவின் முகத்தில் பெருமிதப் புன்னகை! பூர்ணையாவின் முகத்திலோ சிந்தனையின் கீறல்கள்!

"அமைச்சரே!"

"என்ன அரசே?"

கர்னல் 'பிரைத்வெயிட்'டின் சேனையைத் தஞ்சைக் கருகில் முறியடித்தபோதும், கூடலூரை ஆங்கிலேயரிடமிருந்து பறித்துக் கொண்டபோதும் கூட நான் இவ்வளவு மகிழ்ந்ததில்லை! என் தந்தை இல்லையே அமைச்சரே, இந்த மகிழ்ச்சியில் பங்குபெற!"

"அளவுக்கு மீறிய மகிழ்ச்சி, எதிர்காலத்தில் வரப் போகும் பேராபத்துக்கு அறிகுறி அரசே!"

"இதென்ன, புதிர் போடுகிறீர்கள்?"

"அனுபவம் மிக்கவன் நான்; அதனுல் கூறுகிறேன்!"

"எதிர் காலத்தில் வரப் போகும் பேராபத்து என்றீர்களே, அதென்ன? யாரால், என்ன ஆபத்து?"

"தூங்கிக் கொண்டிருக்கும் எதிரியைத் தட்டி யெழுப்பி, தற்காப்புக்கோ தாக்குவதற்கோ ஆயுதமேதுமில்லாமல் அவனெதிரில் மார்பை நிமிர்த்திக் காட்டும் ஒருவரை வாழத் தெரியாதவர் என்பதா, வகையற்றவர் என்பதா என்று புரியவில்லை!"

"அந்தக் கதை இப்போது எதற்கு?"

"இப்போது பாலம் கட்டுவதானது, ஒதுங்கி முடங்கிக் கிடக்கும் தீமையை உற்சாக மூட்டி நாம் வரவழைப்பதைப் போன்றது!"

"நெப்போலியன் தீயவரா? எந்த மடையன் சொன்னுன் அமைச்சரே! துரோகியும் அவரை நேரில் கண்டால் தூய நெஞ்சம் கொண்டு தன்மானமுடையவனுகி அவரைத் தலைவராக ஏற்று மகிழ்வானே! எந்த வகையில் அவர் தீயவர்? அமைச்சரே! ஆராய வேண்டியதுதான்-எதையும் ஆராய வேண்டியது தான்! ஆனல், கண்ணிருக்கும் போது 'காக்கை கறுமையா? கொக்கு வெண்மையா? கிளி பசுமையா? என்று ஆராய்வது வீணனின் செயலல்லவா?"

"கண்ணை நம்பி மட்டும் பயனில்லை; கருத்தையும் செலவிட வேண்டும்! தூரத்தில் குபுகுபு வென்று குதித்தோடும் புது வெள்ளம் போல்தான், கானல் நீர் காட்சி தருகிறது..."

"நெப்போலியன் நல்லவரல்லர் என்று தாங்கள் நினைக்கக் காரணம்? என் நெஞ்சை வதைக்கிறதே உமது ஆராய்ச்சி!..."

"நீர் நினைப்பதைப் போல ஒருவேளை நெப்போலியன் நல்லவராக இருக்கலாம். ஆங்கிலேயரை முறியடிக்க அவருதவி நிச்சயம் கிடைக்கும் என்றே வைத்துக் கொள்வோம். நெப்போலியனின் படைகள் இங்கு வருவதற்காகப் பாலம் அமைக்கிருேம். அந்தப் பாலத்தில் நெப்போலியனின் படை மட்டும் தான் வரமுடியுமென்று எண்ணமா? ஆங்கிலேயரின் படை வர முடியாதா?......அரசே! இங்குதான் நீங்கள் நன்ருகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்! கறையான் எடுத்த புற்றில் நச்சரவம் குடி புகுகின்றது! திப்பு சுல்தான் தனது நாட்டைக் காக்க அமைக்கும் பாலத்தில், எதிரிகள் தமது படை நடத்திவர

— 10-ம் பக்கம் —

கலை விருந்து

செந்தமிழ் இசை வழங்கும்
சீரிய காவியம்!
சிந்தனைக்கு விருந்தளிக்கும்
நாடக ஓவியம்!

பாண்டியன் நாடகமன்றம்
அளிக்கும்

மாலா, எம். ஏ.

(சமூக நாடகம்)

கதை - வசனம்: எம். இராக.
பயிற்சியாளர்: ஏ. வரதராசன்.
செயலாளர்: சண்பகவேல்

விரைவில்
அரங்கில் காணுங்கள்

மேற்கண்ட நாடக மன்றம்
திருவல்லிக்கேணி கே. எம்.
பாண்டியன் படிப்பகத்தின்
துணை அமைப்பு.

வெண்பாப் போட்டி

29-1-55-ந் தேதி இதழில் ஆரம்பமான வெண்பாப் போட்டி ஏறக்குறைய இருபது மாதங்கள் நடந்து 6-10-56-ந் தேதி இதழோடு முடிவுற்றது. ஈற்றடிகளும், முன்னிரு வரிகளுமாக 31 கருத்துக்கள் தரப்பட்டு சுமார் 1500 வெண்பாக்கள் பிரசுரிக்கப்பட் டிருக்கின்றன. அடிக்கடி கடிதம் எழுதி பல தமிழாசிரியர்கள் இந்த வெண்பாப் போட்டியை ஊக்குவித்தார்கள்.

பிரசுரிக்கப்பட்ட வெண்பாக்கள் 1500 என்றால், அலுவலகத்திற்கு வந்து குவிந்தவை எத்தனை இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? எங்கள் கணக்குப்படி சுமார் 12,000 அஞ்சலட்டைகளும், காகிதங்களும் வெண்பாக்களைத் தாங்கி வந்திருக்கின்றன. சில அட்டைகள் இரண்டுக்கு மேற்பட்ட வெண்பாக்களையும் சுமந்திருக்கின்றன. இதுவரை தமிழ் இலக்கியங்களில் இல்லாத அளவுக்கு, எண்ணிக்கையில் அதிகமான வெண்பாக்களைத் தென்றல் அலுவலகம் சந்தித்திருக்கிறது. கற்பனைச் சுரங்கங்கள், கருத்துக் களஞ்சியங்கள் எனப் போற்றத் தகுந்த வெண்பாக்கள் பலப் பல! மிகப் பல.

அடே யப்பா! இத்தனை வெண்பாக்களா? என்று ஒரு தமிழ்ப் புலவர் மூக்கின் மேல் விரலை வைத்தார். இத்தனை கவிஞர்கள் எங்கே இருக்கிறார்கள் என்றொருவர் கேள்வி கேட்டார். ஏராளமான தமிழ்ப் புலவர்கள் வெண்பாக்களைப் படித்துப் படித்து வியந்தார்கள். ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள். மிகச் சிறப்பான எதிர்காலத்தைத் தமிழுக்கு இது தரும் என்றுரைத்தார்கள். பாராட்டுக் கடிதங்கள் நமது உற்சாகத்தை வளர்த்தன. 'தென்றல்' மேற்கொண்ட பணிகளிலே பெரும் பணி இதுதான்.

இந்த நேரத்தில் நாம் ஒருவருக்கு நன்றி சொல்லியாக வேண்டும். வெண்பாப் போட்டி என்னும் ஒரு முறையைப் பிறப்பித்ததற்கான முழு உரிமையையும் நாங்கள் பெறமுடியாது. அதை ஆரம்பித்துச் சிறிய அளவில் செய்து கொண்டிருந்த ஒருவரைத்தான் அது சாரும். அதனைக் கையாண்டு பெரிய அளவில் நடத்திக் காட்டிய பெருமைதான் எங்களுக்கு உண்டு. ஆம்! இந்த முறையைப் பெற்றெடுத்தவர் 'பொன்னி' ஆசிரியராய் இருந்து, புகழ் படைத்து, இப்போது சிங்கைத் தமிழ் முரசில் பணியாற்றும் அருமை நண்பர் முருகு. சுப்பிரமணியம் அவர்களுக்கே உரியதாகும்.

சுமார் பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு! காரைக்குடியிலிருந்து, மறைந்த சீர்திருத்தச் சிற்பி சொ. முருகப்பா அவர்கள் வெளியீட்டு வந்த 'குமரன்' என்னும் இதழில் தோழர் முருகு. அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார்கள். அப்போதுதான் இந்த 'வெண்பாப் போட்டி'யை ஆரம்பித்தார்கள். சுமார் இருநூறு பேர் வரையில் அதில் தொடர்ந்து பங்கெடுத்துக் கொண்டார்கள். அவர்களிலே நானும் ஒருவன். இன்னும் நன்றாக நினைவிருக்கிறது. தோழர் முருகு. அவர்கள் **'பொன்னம் பலமே புகல்'** என்னும் ஈற்றடி ஒன்றைக் 'குமரனி'ல் தந்திருந்தார்கள். ஏ. எல். எஸ். முத்தையா என்ற பெயரில் அதற்கு நான் ஒரு வெண்பா எழுதியிருந்தேன். அதைப் பிரசுரித்து, பிரசுரிக்கப்பட்ட இதழ் ஒன்றையும் நண்பர் எனக்கு அனுப்பி யிருந்தார். அதைப் பார்த்துப் பார்த்து நான் பரவசம் எய்தினேன். அதே மகிழ்வை மற்றவர்களும் அனுபவிக்க வேண்டுமென்பதற்காகத்தான் 'தென்றலில்' அந்த வெண்பாப் போட்டியைத் துவங்கினேன். ஆகவே, வெண்பாப் போட்டியின் தந்தையான தோழர் முருகு. சுப்ரமணியம் அவர்களுக்கு முதன் முதலில் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தான் கண்டு பிடித்த ஒரு முறை, பன்னிரண்டாயிரத்துக்கு மேற்பட்ட வெண்பாக்களைத் தமிழுக்குத் தந்தது என்று கேள்விப்படும்போது அவர் எவ்வளவு மகிழ்ச்சியடைவார்? நிற்க.

'தென்றல்' வெண்பாப் போட்டியில் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை சில நண்பர்கள் இடைவிடாது, சோர்வில்லாது, தொடர்ந்து கலந்து கொண்டிருக்கின்றனர். தோழர் அம்மையப்பன் அன்புரையன், சென்னை கு. இரமாதேவி, கண்டறச்சேரி க. அசலாம்பிகை, வாளாடி. டி. என். என். கவிகுஞ்சரப் பாவலர், நெல்லிக்குப்பம் வித்வான் வெங்கடேசன், பாப்பாரப்பட்டி சீனி, மதுரை இல. காளியப்பன், சென்னை கா. வீ. வரதன், கோனூர் வித்வான் ச. சுந்தரேசன், சென்னை கா. வீ. குருசாமி, கல்லூரணி வித்வான் கரு. சுப்பையா, கல்லுப்பட்டி மேலை-இந்திரா, வரகூர் முருகு, பண்ணைக்காடு இரா. சண்முகம், வேலூர் இரா. சிவஞானவள்ளல், மேலைச் சிவபுரி துரை. சுப்ரமணியம், ஆயக்குடி வே. சாந்த் பாபா, காரைக்குடி நாவுக்கரசன், செங்கல்பட்டு கே. சீனுவாசன், தேவகோட்டை சுப. கல்யாணசுந்தரம், திருமங்கலம் இரெ. தங்கையா, கோலார் இரத்தின மனோகரன், வேலூர் சைலவாசன், கோம்பை அ. சுருளியாண்டிப் பாவலர், திட்டைக்குடி வித்வான் அ. வெங்கடாசலம், இராமநாதபுரம் வித்வான் இல. அரவரசன், கரூர் ல. சேதுராமன், தஞ்சை வித்வான் தாமஸ் உடையார், முருங்கப்பட்டி வெங்கடாசலம், பி. ஏ., பெரும்பாக்கம் மலர்க்கொடி, திருக்காட்டுப்பள்ளி கே. தனமணியம்மை, அம்மாப்பேட்டை புலவர் கோ. பொன்னுச்சாமி, சென்னை வி. ப. கோவிந்தசாமி, பாகனேரி சா. பில்லப்பன், பிச்சைமுத்து முதலியோர் பெரும்பாலும் தொடர்ந்து பங்கு கொண்டிருக்கிறார்கள்.

கலந்துகொண்ட நண்பர்கள் அனைவருக்கும் தென்றல் நன்றி செலுத்துகிறது. வெண்பாக்கள் அனைத்தையும் சேர்த்து ஒரு புத்தகமாகப் பிரசுரிக்கும்படி நண்பர்கள் எழுதுகிறார்கள். தனக்குள்ள பணிகளுக்கிடையே அதைக் செய்யக்கூடிய நிலையில் தென்றல் இல்லை. அப்படிச் செய்வது நலம் பயக்கும் என்ற எண்ணம் மட்டும் இருக்கிறது. ஆகவே யாரேனும் அதனைப் புத்தகமாகப் போட விரும்பினால், அதுபற்றித் தென்றலுக்கு எழுதலாம்.

★

பிரசுரமான வெண்பாக்களில் சில என் நெஞ்சை மிகவும் கவர்ந்தன. கொடுக்கப்பட்ட ஈற்றடியை வைத்துக் கொண்டு, வினோதமாகவும், உருக்கமாகவும் சிந்தித்து, நான் எதிர்பாராத வகையில் சில நண்பர்கள் எழுதியிருந்தார்கள். உதாரணமாக; **கொண்டுவந்து போட்டுக் கொளுத்து** என்ற ஈற்றடி கொடுத்தபோது, செல்லரித்துப் போன பழங் கருத்துக்களை— பயனற்ற நூல்களை — தீய குணங்களை — மக்கள் விரோதிகளைக் கொண்டுவந்து போட்டுக் கொளுத்துமாறு தான் எல்லோரும் எழுதுவார்கள் என நான் எண்ணினேன். ஆனால் சில நண்பர்களின் வெண்பாக்களைப் படித்தபோது நானே உற்சாகத்தில் மிதந்தேன்.

ஒரு குடும்பம்! மனைவி, கணவன், சில குழந்தைகள். பல நாட்கள் பட்டினியிலே பரிதவிக்கிறது அந்தக் குடும்பம். அவதிப்பட்ட கணவன் அல்லும் பகலும் எல்லோரிடமும் யாசிக்கிறான். அந்தியிலே ஒரு பிடி அரிசி அவனுக்குப் பிச்சை கிடைக்கிறது. அதைக் கையிலே தூக்கிக்கொண்டு வேக வேகமாக ஓடிவருகிறான். தன் மனைவியிடம் அதைத் தருகிறா[n] "கண்ணே! அந்திவரை யாசி[த்]தேன்! இப்போதுதான் பிச்[சை] கிடைத்தது. இன்றைக்காவ[து] நமது சேய்கள் உண்ணட்டு[ம்] ஓடிப்போய்க் காய் சருகுகளை[க்] கொண்டுவந்து போட்டு[க்] கொளுத்து" என்கிறான்.

வறுமையிலே அடிபட்ட ஒ[ரு] குடும்பத்தின் உள்ளார்ந்த எ[ண்]ணங்களைப் பதினைந்து சொ[ற்]களில் இந்த வெண்பா விளக்[கி] விடுகிறது. 'இன்றேனும் உ[ண்]டிடட்டும் நம் சேய்கள்' என்[ற] வரி, "ஐயோ! எத்தனை நா[ட்]கள் பட்டினியோ" என்ற ப[ரி]தாப உணர்ச்சியைக் கிள[ப்பு]கிறது. கற்பனைக் குடும்பம் ந[ம்] கண் முன்னாலே தெரிகிற[து.] வேதனையே உருவான பெ[ற்]றோர்; பசி தாளாமல் சுருண்[டு] கிடக்கும் குழந்தைகள். கு[ழி] விழுந்து போன அவர்களி[ன்]

கண்ணதாசன்

கண்கள் நம் மனக்கண் முன்னே படம் படமாக விரிகின்றன. ந[ம்] குடும்பத்திற்கு இந்த நிலை நேர்[ந்]தால்,—அப்போது நாம் ஒரு பி[டி] அரிசி பிச்சை வாங்கி வந்தா[ல்] குமுறி வரும் எண்ண மு[ம்] உணர்ச்சியும் எப்படியிருக்கும் இந்த வெண்பா அதைக் காட்[டு]கிறது.

நல்ல கவிதைக்கு அடைய[ா]ளம் படித்தவுடன் அது இ[த]யத்திலும் கண்களிலும் அ[ப்]படியே நின்று கொண்டிருக்[க] வேண்டும். பாளையங்கோட்டை நண்பர் **ம. இலனியன்** எழுதி[ய] அந்த வெண்பா நல்ல க[வி]தைக்கு இலக்கண மாகிறது. அது, இது:

அந்தி வரை இரந்தேன், அன்பே
பிடியரி[சி]
தந்தார்; உணவு சமைத்திடுவாய்
இன்றேனு[ம்]
உண்டிடட்டும் நம்சேய்கள்; ஓடிப்
போய்க் காய்சருகை
கொண்டுவந்து போட்டுக்
கொளுத்[து]

— 10-ம் பக்கம் —

இராமநாதபுர மாவட்[ட]

தி. மு. கழகத் தோழர்களுக்கு

அன்புடையீர், வணக்கம்,

நாளது 21-10-'56 மாலை 6 மணிக்கு காரைக்குடி தோழ[ர்] கண்ணதாசன் அவர்கள் இல்லத்தில். நிலைமை நிலையத் தேர்தல் ஆய்வுக் குழு கூடி நமது மாவட்டத்திலுள்ள தொகுதிகளின் தேர்தல் சம்பந்தமான நிலைமைகளை ஆராயும். அதுபோது தாங்கள் வருகை தந்து தங்கள் தொகுதி சம்பந்தமான நிலைமைகளைத் தெரிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தங்களன்புள்ள,

இ. ல. ம. சவுந்திரபாண்டியன்

செயலாளர்.

கமுதி,
10-10-'56.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.